மலர் 123
இதழ் 12, 13
விலை 10
கிறிஸ்மஸ்
சிறப்பிதழ்
1997

# பாதுகாவலன்

## PATHUKAVALAN

Registered as Catholic Weekly

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு

31 DEC 1997
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.
கிடைக்கப்பெற்றது
26 DEC 1997
உரிய நடவடிக்கைக்காக
ஆணையாளர்

பொது சன நூலகம்
31 DEC 1997
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

## நத்தார்-புதுவருட சிறப்புமலர்-1997



"இருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக்கண்டனர். மரண நிழல்படும் நாட்டில் உள்ளோர்க்கு ஒளி உதித்துச் சுடர் வீசிற்று." (இசை 9:2)

### நத்தார்-புத்தாண்டு வேண்டுதல்

ஒளிவீசும் இன்னருள் உற்பவப் பேறாக
உலகுயர மலர்ந்த சுதனே
உள்ளக் கதவெலாம் அடைத்துநாம் பேரின்பம்
உதறிப் புலையர் ஆனோம்.
பழிபாவப் பாதகக் கொடியகன் னெஞ்சராய்ப்
பாதைவழி மாறிவிட் டோம்.
பருவமழை காணாது பயிருயர முடியுமோ?
பாதமலர் தேடிவந் தோம்.
பொழிகருணை மேகமே சமாதானப் பொக்ஷமே
புனிதவிடு தலையின் ரூபா
புதுஞான நீதிதந்து நிலையான கதிகாணப்
பொங்குபுயல் தணிய அருளாய்
களிமலரப் புத்தாண்டில் நிறையமைதி வாழ்வோங்கக்
கையேந்த வேண்டு மையா.
கதியுமுயர் ஒளியுமுயிர் வழியுமாய் அன்போடு
கண்ணெதிரே வந்த முதல்வா

யாழ் - ஜெயம்

# HAPPY CHRISTMAS AND A BRIGHT 1998

## நத்தார் - புத்தாண்டு வாழ்த்துக்கள்!

மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன் இன்று ஆண்டவராகிய மெசியா எனும் மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். (லூக். 2 : 10, 11)

### பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களே!....

கிறிஸ்மஸ் புத்தாண்டுக் காலத்தில் உங்களைச் சிறப்பாக நினைக்கிறோம்

ஆலோசகர்களாக — ஆதரவாளர்களாக
வினியோகஸ்தர்களாக — விற்பனையாளர்களாக
விளம்பரதாரர்களாக — விமர்சகர்களாக
எழுத்தாளர்களாக — வாசகர்களாக

இன்னும் பல நிலைகளில் நீங்கள் செய்த பணி அளப்பரியது, இனி வரும் ஆண்டிலும் உங்கள் பணியை முழு நம்பிக்கையோடு எதிர்பார்க்கிறோம்.

அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் அன்பும், அருளும், சமாதானமும், சுபீட்சமும் நிறைந்த நத்தார் — புதுவருட வாழ்த்துக்களை உள்ளத்தின் ஆழத்தில் இருந்து ஆசித்து நிற்கின்றோம்-

ஆசியுடன் ரூபன் மரியாம்பிள்ளை — ஆசிரியர் —



மறைக்கல்வி நிலையத்தில் பாசறை

## உண்மையான நண்பன் யார் ?

உண்மையான நண்பன் யார் என்ற மையப்பொருளில் இடம்பெறும் இப்பாசறை இன்றைய காலத்திற்கு மிகவும் பொருத்தமும் அவசியமானதும் ஆகும். இது போன்ற பாசறை எல்லாப் பாடசாலை மாணவர்களுக்கும் கட்டாயம் கிடைக்க வேண்டும் என விரும்புகிறேன். 31 . 10 . 97 வெள்ளிக்கிழமை புனித மாட்டீனார் குருமட மைதானத்தில் ஏறக்குறைய 200,9ம் ஆண்டு கத்தோலிக்க மாணவர் கலந்து கொண்ட பாசறையில் கொடி ஏற்றி வைத்தபின் உரை நிகழ்த்தும் பொழுது புனித சாள்ஸ் பாடசாலை அதிபர் பி. எவ். சின்னத்துரை மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இப்பாசறை யாழ் / மறைக்கல்வி நிலையத்தால் ஒழுங்குபடுத்தப்பட்டது. முதற் கட்டமாக ஏழு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டது. கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம், துரையப்பா வித்தியாலயம், சென். யோசவ் வித்தியாலயம், சென். அன்ரனீஸ் மகளிர் வித்தியாலயம் பாசையூர், புனித மரியன்னை வித்தியாலயம் ( O . L . R ), புனித சாள்ஸ் மகா வித்தியாலயம், திருக்குடும்ப கன்னியர் மடம் மகளிர் வித்தியாலயம்.

இறைவணக்கத்தோடு பாசறைக் கொடி ஏற்றப்பட்டு மறைக்கல்வி இயக்குனர் ஆர். எச். சகாயநாயகம் அடிகளார் பாசறையின் மையப் பொருளான ''உண்மை நண்பன் யார்?', என்ற கேள்வியை எழுப்பி உற்சாகமான தேடலுக்கு மாணவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

இந்நிகழ்விற்கு குருமட அதிபர் அருட்தந்தை றெஜி இராசேஸ்வரன் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். பாசறையில் அலசி ஆராய்ந்து கண்டறிந்த கன்னிப் படைப்புக்கள் கவிதையாய், கட்டுரையாய், சொற்பொழிவாய், நடனமாய், நாடகமாய், அனுபவப் பகிர்வாய் பல்வேறு வடிவங்களில் மேடைக்கு வந்தன. ஏறக்குறைய இருபது நிகழ்ச்சிகள் மாணவர்களால் மேடை ஏற்றப்பட்டன. தொடர்ந்து தொகுப்புரையை பாசறை நடத்துனர்களின் தொடர்பாளர் அருட்சகோதரன் ஜஸ்ரின் முன்வைத்தார்.

எஸ். எவ். சவுந்தரம்

## பாசறை பற்றிய ஒரு கண்ணோட்டம்

உணர்வுகளில் ஏற்பட்ட உரசல்களினாலும் உறவுகளில் ஏற்பட்ட விரிசல்களினாலும் காணப்படும் உள்ளக் குமுறல்களைத் திறந்து காட்ட எவருமின்றித் தவித்திருந்தவர்களிற்கு ஒரு நண்பனைக் காட்டும் நோக்குடன் இப் பாசறை நிகழ்வுகள் வடிவமைக்கப்பட்டன.

வாழ்க்கை எனும் படகு பலருடன் முட்டிமோதிச் செல்கின்றது. ஆனாலும் அப்படகுக்குத் திசை காட்டுபவர் யார் என்பதைக் கண்டறிவது மிகவும் கடினம். எம்முடைய உணர்வுகளைப் பகிரக்கூடிய ஒரு உண்மை நண்பனைக் கண்டு பிடிக்க முடியுமா? அதற்குரிய முறைகள் எவை? என்பன போன்ற சிந்தனைச் சிதறல்களிற்கு விடைகளாக அங்கு ஒழுங்கு செய்யப்பட்ட விளையாட்டுகள், குழுவேலைகள், கண்காட்சிகள், நாடகங்கள், பொம்மலாட்டம் என்பன அமைந்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களது சொந்த ஆக்கங்களை உள்ளடக்கியதான ஒரு கையேட்டுப் பிரதியும் வெளியிடப்பட்டது. இது இப்பாசறையின் குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும்.

அருட்சகோ. ஜஸ்ரின்

## "அகவொளி" இல்லத்தில் கிறிஸ்தவ குடும்ப இயக்க அங்குரார்ப்பண விழா

தீபாவளித் தினத்தன்று (30 . 10 . 97) ''அகவொளி'' இல்லத்தில் இடம்பெற்ற கிறிஸ்தவ குடும்ப இயக்க அங்குரார்பண விழாவை சம்பிரதாய பூர்வமாக தொடக்கி வைத்து சிறப்புரை நிகழ்த்திய யாழ். ஆயர். மேதகு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இவ்விழாவிற்கு திரு. எ. எஸ். அகஸ்ரின் அவர்கள் தலைமை வகித்தார். யாழ் மறைமாவட்டத்தில் பல பங்குகளில் இருந்தும் 80 பதுக்கும் அதிகமான தம்பதிகள் பங்கு பற்றினார்கள். ஆயர் அவர்கள் தொடர்ந்து உரையாற்றுகையில்; குடும்பத்தைப் பற்றிய திருச்சபையின் போதனை, குடும்ப அப்போஸ்தலத்துவம், கிறிஸ்துவை மையமாகக் கொண்ட குடும்பத்தின் வடிவம், என்ற மூன்று விடயங்களை விளக்கினார். 1980 பதுகளில் உரோமையில் ''கிறிஸ்தவ குடும்பம்'' என்ற மையப் பொருளில் தலைமை ஆயர்கள் ஒன்றிணைந்து ஆய்ந்து வெளியிட்ட அறிக்கையை மேற்கோள் காட்டி பொருளாதாரம், போர், பிள்ளைகளின் எதிர்பார்ப்பு காணாமல் போதல் இது போன்ற பல்வேறு பிரச்சனைகள் மத்தியிலும் கிறிஸ்தவ குடும்பத்தின் அழைப்பு மேன்மையானது எனச் சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்து நிலைய இயக்குனர் அருட்திரு. எஸ். ஜே. இராசநாயகம் அடிகள் ''பகிர்ந்து வாழும் குடும்பம்'' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தும் பொழுது, குடும்பங்களில் பகிர்ந்து வாழும் செயல் இருந்தால் தான் குடும்பங்களிலான திருச்சபையும் பகிர்ந்து வாழும் திருச்சபையாக மாற முடியும். எனவே பகிர்ந்து வாழுதல் மேல் மட்டத்தில் இருந்ததல்ல மாறாக அடிமட்டத்தில் இருந்து சமுதாயத்தின் அடிப்படை அலகான குடும்பத்தில் இருந்து வரவேண்டும் என்றார்.

2000மாம் ஆண்டை நோக்கிய பயணத்தில் இருக்கும் நாம் தனிப்பட்ட முறையிலும் சிறப்பாக குடும்பங்களாகவும் கிறிஸ்துவை மையமாகக் கொண்டும், கிறிஸ்துமயமாகி புதுப்பிக்கப்பட வேண்டும், என்று அருட்தந்தை ஜே. நீக்கிலஸ் அடிகள் உரை நிகழ்த்தும் பொழுது குறிப்பிட்டார்.

திரு. எஸ். எவ். சவுந்தரம் அவர்கள் கிறிஸ்தவ குடும்ப இயக்க கூட்டங்களை எவ்வாறு நடாத்துவது, கூட்ட நிகழ்வின் முக்கிய மூன்று இடங்களான நற்செய்தி வாசிப்பு, திருவழிபாடு, சமூகச் செயல்பாடுகள் இவைபற்றி அங்கத்தவர் கவனிப்பது, தீர்மானிப்பது, செயல்படுவது போன்ற விடையங்களை முன்வைத்து உரை நிகழ்த்தினார். இறுதியில் மறைமாவட்ட கிறிஸ்தவ குடும்ப இயக்க மத்திய குழு அங்கத்தவ தம்பதிகள் தெரிவு செய்யப்பட்டனர். தலைவராக திரு A. S. அகஸ்ரின் தம்பதிகளும் செயலராக திரு X. யோசவ் தம்பதிகளும் தெரிவு செய்யப்பட்டனர்.

## பாலன் இயேசுவின் பிறப்பு விழா எமக்கு விடுக்கும் சவால்கள்

அருட்சகோதரன் ம. பத்திநாதர், புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி

கிறிஸ்துவின் பிறப்பும் கிறிஸ்துவின் பிறப்புடன் ஒட்டிய நிகழ்வுகளும் இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளிற்கு முன்னர் வரலாற்றில் நிகழ்ந்த ஒரு வரலாற்று நிகழ்வாக மட்டுமல்லாமல் கடந்த இரண்டாயிரம் வருடங்களினூடு வாழ்ந்து, வாழ்ந்து கொண்டிருக்கின்ற மனித சமுதாயத்திற்கு அவர்களின் வாழ்வின் விழுமியங்களுக்கு சவால் விடுக்கும் செய்திகளைப் பொதிந்த நிகழ்வாகவும் இது அமைந்து விடுகின்றது.

இறைவன் தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார். பசித்தோரை நலன்களால் நிரப்புகிறார் என்ற மரியாளின் இறை அனுபவம் கிறிஸ்துவின் பிறப்பிலே மரியாளின் உள்ளத்திலே மென்மேலும் ஆழப்படுத்தப்படுகின்றது. இயேசுவின் பிறப்பு மாட்டுத் தொழுவத்திலே இடம் பெறுவதும், மரியாள் தன் குழந்தையைத் தீவனத் தொட்டியில் கிடத்துவதும், ஏழை இடையர்கள் தமது ஏழ்மைத் தன்மையுடன் இந் நிகழ்வைப் பார்க்கச் செல்வதும், ஜெருசலேம் ஆலயத்தில் இயேசுவை காணிக்கை



யாக்கி மீட்டுக்கொள்ளும் போது சாதாரண ஏழைகளின் தரத்திற்கேற்ப பலி செலுத்துவதும், ஆலயத்தில் வயது முதிர்ந்த ஏழைகளான சிமியோனும், அன்னாளும் அவரைத் தமது உள்ளத்திலே ஆவலோடு வரவேற்பதும், சூசை, மரியாள் ஏழ்மை நிலையையும், ஆண்டவன் இயேசுவின் பிறப்பின் ஏழ்மை, எளிமைத் தன்மையையும் இறைவன் ஏழைகளின் இறைவன் என்ற இறையியல் உண்மையையும் தெட்டத் தெளிவாக எமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

## கிறிஸ்மஸ் குடில்... ( 12ஆம் பக்கத் தொடர்ச்சி)

போது ஏரோணி முசால் கொண்டுவரப்பட்ட புனித பொருட்களை பெத்தலேகேமில் உள்ளது போன்று குகை செய்து அதற்குள் வைத்து ஆராதித்தார்.

1232 இல் புனித பிரான்சிஸ் அசிசியாரின் மனதில் ஒரு சிந்தனை உதித்தது. யேசு பிறந்த இடமாகிய பெத்தலேகேமின் யேசு பிறக்கும் போது இருந்த சூழல் அமைவை ஒத்த ஒரு இடத்தில் கிறிஸ்மசைக் கொண்டாட எண்ணினார். அதற்கு திருத்தந்தை ஒனோரியஸ் அவர்களிடம் இருந்து அனுமதியைப் பெற்றார்.

பின் பெத்தலெகேமின் குகை போன்றதும் அதன் சூழலைக் கொண்டதுமான ஒரு இடத்தைத் தெரிந்தார். அது சிநோச்சியோ என்ற இடத்தின் எதிர்ப்புறத்தில் அமைந்த ஒரு சிறிய மலை. இவ்விடம் குகைகளையும் உச்சியில் சிறிய காடு ஒன்றையும் கொண்டு அவர் எண்ணிய பெத்தலேகேம் சூழலை ஒத்து இருந்தது. இதில் குடில் ஒன்று அமைத்து மெழுகினால் உருவாக்கிய குழந்தை யேசுவின் திருச்சுருபத்தையும் செய்து வைத்து அங்கே சூசை, மரியாளாக மனிதர்களை நடிக்கவிட்டு மந்தைகளையும், மாடுகளையும் விட்டு பெத்தலேகேமின் நிகழ்வை ஞாபகம் சேய்தார். இன் நிகழ்வு கிறிஸ்மசுக்கு முதல் நாள் மாலை இடம் பெற்ற நிகழ்வாகும். இதில் அவ்வூர் மக்களும் துறவிகளும் மெழுகுவர்த்தி ஏந்தி பாட்டுப் பாடி மகிழ்ந்தனர். அன்றைய அந்த நிகழ்வே கிறிஸ்மஸ் குடிலை மக்கள் விரும்பி செய்து மகிழும் பழக்கத்திற்கு வழிகோலியது.

16ஆம் நூற்றாண்டுக்கு பின்னரே வீடுகள் ஆலயங்களில் கிறிஸ்மஸ் குடில்வைத்து அழகு படுத்தும் வழக்கம் மூனைப்பு பெற்றது.

## ஐரோப்பாவில் யாழ். திருமறைக்கலா மன்ற 'வடலிக்கூத்தர்'

திருமறைக் கலா மன்றத்தின் விசேட கலைக் குழுவினர் அண்மையில் ஐரோப்பிய நாடுகளுக்கு சென்று திரும்பியுள்ளனர். ''வடலிக் கூத்தர்'' என்ற மேற்படி குழுவினர் எமது மண்ணின் பாரம்பரிய கலை வடிவங்களில் சமகால நெருக்கடியை வெளிக்கொணரும் சமூக நாடகங்கள் பலவற்றை ஐரோப்பிய மண்ணில் மேடையேற்றி வெற்றிகரமாகத் திரும்பியுள்ளனர்.

## கிறிஸ்மஸ் விழா ( 12ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரலாற்று குறிப்புக்களின் படி கிறிஸ்மஸ் விழாவினை நோக்கின் கி.பி 138 – 161 காலங்களில் தெருலெஸ் போருஸ் இனுடைய காலத்திலே இவ் விழா மலர்ந்ததாக சில குறிப்பு உண்டு. ஆனால் 180 — 192 காலப்பகுதிகளில் கொம் மோடஸ் மன்னனுடைய காலத்திலேயே முதன் முதலாக கொண்டாடப்பட்டதாக கூறப்படுகின்றது.

அலெக் சாந்தியா கிளமெந்து தனது நூலில் கி.பி 200 ஆம் ஆண்டு எகிப்து நாட்டில் இவ்விழா இருந்ததாக குறிப்பிட்டுள்ளார்,

ஆரம்பத்தில் இவ் விழா ஜனவரி 6, மார்கழி 25 ஆகிய பல திகதிகளில் கொண்டாடப்பட்ட போதும் 336 இல் கொன்ஸ்தாந்தின் ஆட்சியின் போதுதான் உரோமைத் திருச்சபை மார்கழி 25 இல் கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடியது. இதனை 440 இல் உரோமைப் பாப்பாண்டவர் வெளியிட்ட தனது அறிக்கையில் உறுதிப்படுத்தினார்.

529 இந் பேரரசன் ஜச்சேனியர் இவ் நாளை அரச விடுமுறை நாளாக அறிவித்து இந்த கிறிஸ்மஸ் நாளுக்கு மேலும் பெருமை சேர்த்தார்.

## மன்னார் ஆயரின் கடிதம்

மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருள்திரு. இராயப்பு யோசவ் ஆண்டகை மன்னார் மறைமாவட்டப் பகுதிகளில் நடைபெறும் சமூகச் சீர்கேடுகளை எடுத்துக்காட்டி அவை நிறுத்தப்படவேண்டும் என்று தம் மன்னார் மறைமாவட்ட மக்கள் கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் தமது கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

''மன்னார் மறைமாவட்டத்தின் நகரப் பகுதிகளிலும், கிராமங்களிலும் கூட அண்மைக் காலத்தில் பல சமூகச் சீர்கேடுகள் தலைதூக்கி நமது சமுதாயத்தை அழிவிற்கும், துன்பத்திற்கும் அழைத்துச் செல்லும் ஆபத்தை உருவாக்கியிருப்பதை நாம் கவலையுடன் நோக்க வேண்டியுள்ளது.

( தொடர்ச்சி 9ஆம் பக்கம்)

## இதயஒலி

யாழ். கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம் ''இதய ஒலி'' என்னும் இரண்டாவது இதழை வெளியிட்டு உள்ளது. இருளைப் பழிப்பதைவிட ஒளியை ஏற்றுவது மேல் என்ற விருது வாக்குடன் மாணவர்கள் இதழாக பல அறிவியல் சிந்தனைகளுடன் செய்திகளையும் தாங்கி வந்துள்ளது.

பணி தொடர
வாழ்த்துகின்றோம்.



# வாசகர் கருத்து



எங்களுக்கு பாதுகாவலன் கொழும்பு சிறப்பு நிருபர் மோ. தார்சீசியஸ் அவர்கள் மூலமாக கொழும்பிலிருந்து பாதுகாவலன் பத்திரிகை கிடைக்கப் பெறுகின்றது.

சென்ற காலங்களிலும் பார்க்க இக்கஸ்டமான பதட்டமான, காலத்தில் புதுப்பொலிவுடன் பாதுகாவலன் வளர்ச்சி கண்டு வாழ்த்துகின்றேன், மகிழ்கின்றேன்.

பாதுகாவலனில் வெளியாகும் கட்டுரைகள், சிந்தனைகள், கவிதைகள் எங்கள் மனதைக் கவர்ந்தன. எங்கள் குடும்பத்தார்களுக்கு உங்கள் பத்திரிகை ஆக்கங்கள் எமக்கு ஆறுதலையும் உற்சாகத்தையும் ஊட்டுகிறது. முக்கியமாக மறைஆசிரியர் ஜெயசீலனின் யூபிலி ஆண்டு எண்டா என்ன அண்ணே! என்னும் கட்டுரை எங்கள் மனதைக் கவர்ந்தது என்பதைக் குறிப்பிடுகின்றேன்.

அ. எற்வேட்
திருச்சி 17
தென் இந்தியா

★

அன்புடையீர்,

பாதுகாவலன் சுமந்துவரும் ஆன்மாவுக்கும் உடலுக்கும் மெருகூட்டும் செய்திகளைப் பருகிச் சுவைக்கும் வாசகர்களில் ஒருவரான நானும் எனது குடும்பமும் 1957ஆம் ஆண்டு முதல் பாதுகாவலன் பிரதிகளைத்தொடர்ச்சியாகப் பெற்று வருகிறோம். அதை அச்சிட்டு வினியோகிக்கும் புனித வளன் கத்தோலிக்க அச்சகத்துக்கும் பணி புரிவோருக்கும் எனது நன்றிகளைத் முதற்கண் தெரிவிக்கின்றேன். இதில் வெளியாகும் சிறுகதைகள், கட்டுரைகள் படிக்கப் படிக்கத் தெவிட்டாதவை. அறிவித்தல்கள் மூலம் எமது உடன்பிறப்புகள் மத்தியில் இடம்பெறும் நிகழ்வுகளை அறியக்கூடியதாகவுள்ளது. குடும்பம் ஒரு கதம்பம், ஆசிரியர் கருத்து என்பனவும் சிறப்பாக அமைகின்றன. பாதுகாவலனின் சேவை இறைவன் அருளால் மென்மேலும் வளர வாழ்த்துகிறேன். பாதுகாவலனே- நீ

ஒளியும், வாழ்வும் உண்மையும் கொண்டவனாய்ப் பிறந்தாய். இறைவனவன் குறைவிலா வல்லமையால் ஊட்டம் பெற்றாய். கத்தோலிக்க தமிழ்மக்களின் அரவணைப்பில் வளர்ந்தாய். இலங்கையின் முதல் கத்தோலிக்க தமிழிதழ் எனப்படுகிறாய். உலகின் கிறிஸ்தவ மறைபரப்பாளனாக ஓங்கி வளர்வாய்.

மேலும் என்னுடைய பிரதி உட்பட ஆறு (6) பிரதிகள் அனுப்ப முடியுமா? முடியுமானால் நானே அவற்றுக்கு பணம் செலுத்துகிறேன் என உறுதி அளிக்கிறேன்.

MR. S. பஸ்தியாம்பிள்ளை
சிப்சைட்
15A அசரப்பா வீதி,
நீர்கொழும்பு,
சந்தா இல. 113

தங்கள் மடலுக்கு நன்றி. நீங்கள் கேட்ட 6 பிரதிகள் அனுப்புகிறோம். உங்கள் முயற்சியை வெகுவாகப் பாராட்டுகிறோம். எமது விற்பனைக்கு இன்னும் உதவுவீர்கள் என எதிர்பார்க்கிறோம்.

(ஆ.ர்)

★ ★ ★

15 செப்ரெம்பர்- 15 ஒக்டோபர் மாத பாதுகாவலன் படித்துணர்ந்தேன். உண்மையிலேயே பாராட்டிற்குரியது. ஏனெனில் உன்னதரின் உண்மையை உலகினருக்கு எளிமையில் எடுத்தியம்பிய தியாகச் சின்னம் அன்னை திரேசாவின் மறைவையொட்டி அந்த அன்னைக்கு தன் எழுத்தஞ்சலியை பாதுகாவலன் படைத்திருந்தமை மிகவும் வரவேற்பிற்குரியது. இதன் மூலம் இன்றைய சிறுவர்களும், இளைஞர்களும் இவ் உத்தமியின் பண்பினை, பணிகளை அறிய வாய்ப்பினை அளித்தது. இவ்வாறு தன் இறுதி மூச்சுவரை ஆண்டவனின் அன்பைச் சொந்த அன்னைக்கு காவலன் தன் ஓர் இதழ் மூலம் அஞ்சலி செலுத்தியதுடன் மட்டும் நின்றுவிடாது வாழ்ந்த புனிதையின் பணிகள் வாழப்படவேண்டுமாயின் அவர் வாழ்க்கை வரலாறு இன்றைய இளம் சமுதாயத்தினருக்கு அத்தியாவசியமானது. எனவே காவலா! உன்னிடம் அன்பான வேண்டுகோள். அஃதாவது இவ் அன்னையின் வாழ்க்கை வரலாறுகள், இவரது பணிவாழ்வில் உள்ளத்தைத் தொடும் அனுபவங்கள், சம்பவங்கள் போன்றவற்றைச் சேகரித்து தொடர் கட்டுரையாக வெளியிடவேண்டும் என்பது எமது தாழாத ஆவலும் உனது தலையாய பணி என்பதையும் எடுத்துரைக்கின்றோம். உன் பணி சிறப்புறத் திகழ இறை ஆசிகள் வேண்டி நிறைவு செய்கின்றேன்.

சூ. மேரி. வுளோறன்ஸ்
சென் ஜேம்ஸ் ஒழுங்கை,
இளவாலை.

## "பாதுகாவல"னின் சின்னம்

இச்சின்னம் அழகானது மட்டுமல்ல, ஆழமான கருத்து வளங்களையும், நாட்டுப் பற்றுடன் சமய எண்ணக் குவியல்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது மாத்திரமன்று சிறப்புடனும் பொலிவுடனும் திகழ்கின்றது.

இது பாதுகாவலனின் எதிர்கால வளர்ச்சிக்கு எடுத்துக் காட்டாகும்.

மோ. தார்சீசியஸ்

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்)

# குடில் தேடிய குல மகன்



இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்களின் முன்பு, ஒரு எளிய ஏழைக்குடும்பத்தில், ஓர் குழந்தை பூமிக்கு வந்தது. அன்று முதல் இன்று வரை இக்குழந்தையின் பெருமை, மகிமை எத்திசையிலும் போற்றப்படுகின்றது. புகழப்படுகின்றது. அக்குழந்தையின் பிறப்புவிழா, பெருவிழாவாக அகிலமெங்கும் கொண்டாடப்படுகின்றது. ஏனெனில் இறை நியதிப்படி மாண்டு போயிருந்த மனித குலத்தை மீட்க வந்த குழந்தையது. அன்பிற்கும் அமைதிக்கும் அடையாளமாக அனுப்பப்பட்ட அற்புத குழந்தையானது ஒளியாக, வழியாக, வாழ்வாக, எதிர்பார்க்கப்பட்ட மெசியாவாக, தேவனின் திருவுளப் பெயர் தாங்கிய கிறீஸ்துவாக குவலயம் வந்துதித்தது.

கிறீஸ்துவின் பிறப்பு விழா என்றவுடன் நாம் வீடுகளிலும், கோவில்களிலும் குடிசையமைத்து குழந்தை யேசுவுக்கு அஞ்சலி செய்கின்றோம். காலாகாலமாக அவரைத் தரிசிக்க முண்டியடிக்கிறோம். ஆனால் எம்மத்தியில் எத்தனையோ நம் சகோதரர்கள், கிறீஸ்து பிறந்த அதே நிலையில், வறுமையின் பிடியிலே, உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி, இருப்பதற்கு இல்லிடமின்றி வாடி நிற்கின்றார்கள். விசேஷமாக இன்றைய கால நிகழ்வுகளால் மேலும் கதியற்று, கலங்கி உடல், உளம் ஊனமுற்று உயிர்களைப் பறிகொடுத்து சொத்திழந்து, சுகமிழந்து ஏங்கி நிற்போர் எம்மத்தியில் எண்ணிலடங்கார். இங்கேதான், இவர்களில்தான் தமது பிரசன்னத்தை நாம் காண வேண்டுமென, வருடாவருடம் நாம் அமைக்கின்ற குடிலும், குழந்தையும் எமக்குக் குறிவைத்துக் காட்டுகின்றன.

எனவே நாம் வாழுகின்ற சூழலிலே சமுதாயத்திலே ஒடுக்கப்பட்டோர், நலிவுற்றோர், சோர்வுற்றோர் நடுவே கிறீஸ்துவின் தூய தரிசனத்தை நாம் காண விழைவோம். கிறீஸ்துவுடன் பிறந்த அன்பு, அமைதி, சமாதானத்தை எம் உள்ளங்களிலும் பிறக்க அனுமதிப்போம். கிறீஸ்துவின் பிறப்பு எம்மையும் புதுப்பிறப்படையச் செய்யட்டும்.

திருமதி. றோஸ் இராஜரட்ணம்
115, ஸ்ரேஷன் றோட்,
யாழ்ப்பாணம்.

## யூபிலி ஆண்டு எண்டா என்ன அண்ணே?




★ அண்ணே எங்கடை பங்கு சுவாமியும் மறைக்கல்வி ஆசிரியரும் கிறிஸ்து பிறந்த 2000ஆம் யூபிலி ஆண்டை சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்று சொல்லுகினம் அண்ணே. எப்படி அதை சிறப்பாகக் கொண்டாடுகிறது?

★ தம்பி 2000ஆம் ஆண்டு யூபிலி ஒரு மகிழ்ச்சியான கொண்டாட்டம்தான். அது கிறிஸ்து பிறந்த 2000ஆம் ஆண்டு முடிவுற்று 3000ஆம் ஆண்டுக்குள் நுழையும் ஒரு முக்கிய நிகழ்வு. கிறிஸ்து பிறப்பு யூபிலிக் கொண்டாட்டம் வெறும் வெளிக் கொண்டாட்டமல்ல. சிலர் என்ன நினைக்கினமெண்டால் பாலன் குடிலில் அமைத்து பெரிய வெளிச்சக்கூடுகள் அலங்காரங்கள் செய்து பட்டாடைகள், பலகாரங்களோடை சிறப்பாக கொண்டாடுகிறதைத்தான்.

இன்று எமது திருச்சபையிலும் வழிபாடுகள் விழாக்கள் எல்லாம் வெறும் வெளிக் கொண்டாட்டங்களாய்த்தான் இருக்கு. இதனால் போட்டிகள் பிரச்சனைகள் சண்டை சச்சரவுகள்தான் கூடுதே அன்றி உண்மையான அர்த்தம் வெளிப்படுவதில்லை தம்பி. யூபிலி இறைவன் திருச்சபைக்குத் தந்த மாபெரும் கொடை, யேசுவின் இறையரசின் மதிப்பீடுகளின் அடிப்படையில் திருச்சபை தன்னை மாற்றியமைக்க தரப்பட்ட காலம் இக்காலம். நாம் எல்லோரும் திருச்சபையின் உறுப்புக்கள். உறுப்பு ஒன்று பழுதுபட்டால் அது உடல் முழுவதையும் பாதிக்கும்தானே. தம்பி முதலிலை நாம் ஒவ்வொருவரும் நம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். யேசுவிடம் விளங்கிய அன்பு, அமைதி, கருணை, இரக்கம், மன்னிப்பு, மனித நேயம் போன்ற பண்புகள் எம்மிடம் வாழப்படுகின்றதா? அதாவது நாம் ஒரு கிறிஸ்துவாக வாழ்கின்றோமா.? அப்படியான ஒரு கிறிஸ்தவ வாழ்வு வாழ முற்படுவதே உண்மையான கொண்டாட்டம். யேசுக் கிறிஸ்து பிறந்தவேளை வானதூதர் "உலகில் நல்ல மனம் உள்ளோருக்கு அமைதி உண்டாகுக" என்று பாடினார்களே. அந்த அமைதி இன்றைய உலகில் உருவாக நாம் உழைக்கவேண்டும்.

உன்னைத் திருத்து உலகம் திருந்தும் என்பதற்கு ஏற்ப நாம் ஒவ்வொருவரும் யேசுவாக மாறுவோம். இந்த உள்ளமாற்றம்தான் உண்மையான கொண்டாட்டம். சரி தம்பி நேரமில்லை, பிறகு சந்திக்கிறேன்.

இ. ம. ஜெயசீலன்.

## அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்?

மஞ்சு

கண்களைத் திறக்க முயற்சிக்கின்றேன். முடியவில்லை. வாயை அசைக்கின்றேன். வார்த்தைகள் வர மறுக்கின்றன. நான் எங்கு இருக்கிறேன்? என் உடம்பெல்லாம் யாரோ அடித்துப் போட்டாற் போல வலிக்கின்றதே. என்ன இது? ஒரே சோர்வாக, களைப்பாக, கஷ்டமாக இருக்கிறது.

"மிஸ் மஞ்சு. உங்களின் சத்திரசிகிச்சை வெற்றிகரமாக முடிந்துவிட்டது. அபாயமான கட்டத்தைத் தாண்டி விட்டீர்கள். இப்போ நேரம் என்ன தெரியுமா? இரவு 10 மணி". குரலுக்குரியவர் எனது டாக்டர் தான்.

அப்படியாயின் என் இருதயத்திலே செயற்கைக் குழாய் பொருத்தியாகி விட்டது. நான் இன்னும் உயிருடன் தான் இருக்கின்றேனா? மனதால் இறைவனுக்கு நன்றி கூறுகிறேன்.

மெல்ல மெல்ல எனக்கு சுய நினைவு திரும்புகின்றது. என் கண்களை இப்போது திறக்க முடிகின்றது.

அதி விசேட சிகிச்சைப்பிரிவு கூடத்தில் (I. C. U.) ஓர் கட்டிலில் நான் எனது வலது கை நரம்பினூடாக இரத்தமும் இடது கை நரம்பினூடாக நீராகாரமும் (சேலைன்) என் உடம்புக்குள் ஏற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும் பல வயர்கள் என் உடம்பிலே பக்குவமாக பொருத்தப்பட்டுள்ளன, கஷ்டமின்றி சுவாசிப்பதற்கான கருவியின் உதவியுடன் சுவாசிக்கின்றேன். என் முன்னால் ஒரு டாக்டரும் ஒரு தாதியும் அமர்ந்திருந்து என் தலைமாட்டில் பொருத்தப்பட்டிருந்த இயந்திரத்தின் உதவியுடன் எனது இதயத்தின் செயல்பாட்டினை அவதானித்து குறிப்பு எழுதிக் கொண்டிருப்பதைக் காண்கிறேன்.

என் நினைவுகள் பின்னோக்கி செல்கின்றன...... காலை சரியாக 8.00 மணிக்கு சத்திர சிகிச்சை கூடத்திற்குள் கொண்டு செல்லப்பட்டதாக ஞாபகம். என் பெற்றோர், சகோதரர், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரும் என் மனக் கண்களில் வந்து போகிறார்கள். இனி இவர்களைக்காண நான் உயிருடன் இருப்பேனா? பல வித நினை

(தொடர்ச்சி 9 ஆம் பக்கம்)

## அருளூற்றி ஆதரிக்கும் அன்பரசே!

அருளூற்றி ஆதரிக்கும் அன்பரசே எம்மிதய
இருளகற்றி ஒளியேற்றி ஈந்தருளும் இதயசுத்தி
கடவுளோடு ஒன்றித்த ஆழமான அன்பை
எம்முடனே பகிரவந்த உன்னதரே! வாழ்க.
சஞ்சலங்கள் சூழாத சமுதாயம் குடியிருத்தி
பஞ்சத்தில் துடிக்காது பாதுகாக்க வந்தருளும்.
உள்ளத்தின் அடியில் ஊற்றாகும் மனிதநேயம்
உலகத்தில் விரைந்திருக்க அளிப்பீர் விழிப்புணர்வு
இறைவனும் மனிதனும் இயற்கையும் இணைகின்ற
இசைவான அன்புறவின் உண்மைகளை ஒளிரவிடும்.
வறுமையும் ஏழ்மையும் போற்றிய பாலனே!
பொறுமையும் செபநோன்பும் தியாக தியானமும்
எமக்கருளும்.

ஞா. அரியமலர்
மிருசுவில்

## வரவேண்டும்

வரவேண்டும் பாலகனே!
எம் உள்ளத்தில் நீர்
தங்க வேண்டும்.
யூபிலி ஆண்டு காணும்
மூவொரு முதல்வனே!
முத்தமிழால் நாம் வாழ்த்த
மூவுலகின்
வேந்தனே வரவேண்டும்.
தீமை எனும் கொடிய
வேட்டுக்கள் அகல வேண்டும்.
தரணியர் யாவரும்
தன்மானத்துடன் தலை
நிமிர்ந்து மனித மாண்பை
மதித்து வாழ மாதிரியான
மாபரனே வரவேண்டும்.

S. G. றூபவசந்தினி
இராச வீதி, கோப்பாய்.




## சமாதானக் குழந்தை

உங்களுக்கு மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி
இடையர்க்கு மனம் நிறை மகிழ்ச்சி
எதிர்பார்த்த மனநிறைவில்
தேடி ஓடினர் இடையர்கள்.
சமாதான குழந்தையிடம்,
தேடுவோம் ஓடுவோம்.
எம் சமாதானத்தைக் காண நாம்!

தொழுவமதில் பிறந்துவிட்ட
சமாதானக் குழந்தையை அங்கிருக்க
விடவில்லை அன்றைய ஏரோதன்.
சமாதானம் ஓடுகின்றது ஒளிக்கின்றது
ஒரு நாள் வெளிப்பட!
ஒளித்திருக்கும் சமாதானம் நாளை
நம் நாட்டுக்கும், காத்திருப்போம்!

பெனடிற் இராசநாயகம் அமலநாயகம்
நாவாந்துறை





## கன்னித் தமிழ் மஞ்சத்திலே....

பாரினில் விந்தையினை
புரிந்திட்ட அமலனே — எம்
அக இருளை களைத்திட
உருவெடுத்த மானிடனே — உம்
நாமம் சொல்லவே — கவி
மணக்கும் நாயகனே...!

சிதறடித்த மந்தையினை
ஒன்று சேர்க்க வந்தனே — உம்
மந்தைகளின் இன்னலுக்கோர்
விடிவு தான் எப்போதோ?

J. அகஸ்ரின்
யா / செங்குந்தா இந்துக் கல்லூரி
ஆண்டு - 7

## வரம்

வரம் ஒன்று கேட்பேன்.
தருவாயா?
வந்தேன் உன் தொழுவம்.
அருள்வாயா?
அன்று உனக்கு ஞானியர்
கொடுத்தனர் கொடையாக
முப்பொருள் முழுமனதுடன்
இன்று முத்தமிழ்க் கவிதந்து
கேட்கிறேன் வரமாக.
நம்பிக்கையுடன்
வரம் கொடு மைந்தனே
வறியவர் தம் வாழ்வும்
வஞ்சனை கொள் உள்ளமும்
வேரோடு வெட்டுண்டு
புதிய தளிராய்
பூமிதனில் புது மலராய்
பூத்து வாசம் பரப்பவும்
உறவுகளை இழந்து
உரிமையினைத் தொலைத்து
உறக்கத்தில் இருக்கும்
ஊமை உள்ளங்கள்
உன் வரவு கண்டு
உதய சூரியனாக
உருவாகவும் வரம் தருவாயா?

வீ. இவோண் ஜெறிற்றா
கரம்பன் தெற்கு,
ஊர்காவற்றுறை



## மாபரனே வருக!

வருக! வருக!
மாபரனே வருக!
மானிடரைக் காத்திடவே
மரியின் வயிற்றில்உதித்தவரே!
நெஞ்சத்திலேதூய்மை இல்லை
தூய்மை தனைத் தந்திடவே
மரிமகனே வந்திடுக.
உளமதில் உறைந்திடுக.
பாரினிலே பாவங்கள்
இல்லத்திலே இன்னல்கள்
உள்ளத்திலே குமுறல்கள்
மனதினிலே வெறுப்புக்கள்
யாவையும் நீக்கிட வே
மீண்டும் நீ வந்திடுக.
நிலையில்லா உலகினிலே
நிம்மதியை இழந்துவிட்டோம்.
ஆயனில்லா ஆடுகள் போல்
அன்றாடம் அலைகின்றோம்
வழி தேடும் விழிகளுக்கு
ஒளி கொண்டு வந்திடுக.

—லூசிலா ஞானப்பிரகாசம்
(மறை ஆசிரியை)
ஊர்காவற்றுறை

## செம்மலே நீ பிறப்பாய்!

ஓ யேசுபாலா!
அன்றொரு நாள் நீ
மண்ணிலவதரிக்க
மந்தையின் குடில்
மனுமகன் வீடானது
இப்போதோ — நீ
மனித மனத்தின் மத்தியிலே
மலர விரும்புகிறாய்.
ஆனால்...
பொய்மை பகைமை
சுயநலம் அநீதி
அக்கிரமம் அடக்குமுறை
எம் இதயத்தை
ஆக்கிரமித்துள்ளது.
அப்போ...
எங்கே நீ பிறப்பாய்?
அக்கிரமத்தின் சங்கிலியை
அறுத்தெறியவும்
அன்பை அமைதியை
நீதியை நிலை நாட்டவும்
ஏற்றத்தாழ்வுகள்
அடிமைத்தனங்களில் நின்று
விடுதலை தரவும்...
மனித நேயத்தை மனித
மாண்பை
மலரச் செய்து — அதிலே
அமைதியின் ஆதவனாய்
செம்மலே நீ பிறப்பாய்.

எஸ். யேசுதாஸ்
செபமாலை அன்னை ஆலயம்
கொழும்புத்துறை.

## இயேசு பாலகன்

வானத்துச் செய்தி மரியாளுக்குரைக்க
ஞானத்துக் குழந்தைக்காய் தவம் கிடந்தாள்.
தானெதைச் செய்தாலும் தன்பிள்ளை நினைவுடன்
மானத்தை உணர்ந்த கன்னி தாழ்மையாய்க் கீழ்ப்படிந்தாள்.

உலகம் முழுவதும் கண்துயிலும் நேரம்
இறைவன் வந்தார் பெத்லகேம் ஓரம்
உலகில் ஒளியை ஏற்றவந்த தீபம்
குடிலிலே துயிலும் விந்தையினைப் பாரும்.

வெண் பனித்தூறலில் உடலும் நடுங்க
பண் பல பாடி வானோர் வாழ்த்த
தண் ணொளி பாலகன் அமைதியில் உறங்க
விண் மீன் ஒளியில் குடிலும் துலங்க.

விண்ணிடை தீபம் போல் விண்மீன் கண்டு
எண்ணரும் உவகையுடன் ஞானிகள் அன்று
மண்ணில் காண் கீழ்த்திசையில் நின்று
தண்ணென விண்மீன் காட்டும் வழி வந்தார்.

(இயேசு காவியத் தழுவல்) ஆதாரம்

கமிலஸ் அன்ரனிநாயகம்
சில்லாலை, பண்டத்தரிப்பு.



## வாழ்வினில் ஒளிதரும் இரட்சகர்

தொழுவமே துலங்கிட யேசுபாலனாய் உதித்தவர்
தொழுதிட வைத்திட புதுமைகள் புரிந்தவர்.
தேவதாய் மேரியின் வளர்ப்பினில் உயர்ந்தவர்
தேவதாய் வாழ்வினில் ஒளிதரும் இரட்சகர்.

இளமையில் ஒழுக்கமும் பணிதலும் பெற்றுமே
சிறுவனாய் போதனை புரிந்துமே வாழ்ந்தவர்.
அவனியில் கவலையும் கொண்டுமே வாழ்பவர்
அவலமும் போக்கிட துணைபுரி வாரவர்.


அல்வை கே. ஆர். திருத்துவராஜ்

4ஆம் ஆண்டு நினைவு

46ஆம் மாத நினைவு







| திருமதி குருசுப்பிள்ளை அக்னஸ் (பிள்ளையம்மா) | | செல்வன் சிங்கராயர் ஜானி கனோஜி | | செல்வி அருள்நாயகி குருசுப்பிள்ளை | |
|---|---|---|---|---|---|
| மலர்வு | அழிப்பு | மலர்வு | அழிப்பு | மலர்வு | அழிப்பு |
| 07-05-1913 | 13-11-1993 | 27-12-1985 | 13-11-1993 | 06-05-1947 | 09-01-1994 |

"சீவியத்தில் இவர்களை நேசித்தவர்களே மரணத்திலும் இவர்களை மறவாதீர்கள்"

மின்னாமல் இடியிடித்த வாறாய் அந்தோ!
விட்டெம்மைப் பிரிந்தனையே துயரில் ஆழ்ந்தோம்,
கற்கண்டே எம் அருமை மகனே: எம் செல்வமே!
கண்ணான எம் அருமைத் தாயே! தியாகச்சுடரே!
என் உடன் பிறப்பே! என்னருமை அக்கா!
உடலுருகி உளமுருகி எரிகின்றோமே!

இதைக் கண்ணுறுவோர் இவர்களின் ஆன்ம சாந்திக்காக வேண்டிக்கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

இவர்களின் பிரிவால் துயருறும்
மகன் - தந்தை - சகோதரன் - குருசுப்பிள்ளை சிங்கராயர்
மருமகள்- தாய்- மைத்துனி- சிங்கராயர் பிலோமினா
பேரன்- சகோதரன்- மருமகன்- சிங்கராயர் ஷானஸ் நௌறோஜி
உற்றார், உறவினர்.

663, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

A/56/97

---

எம் நினைவில் நீங்காத ஆண்டு 18 — ஆண்டு 11



திரு. P. ஜேம்ஸ்
இராசசிங்கம்

(கொழும்புத்துறை
R. C பாடசாலை
முன்னாள் அதிபர்)

மண்ணில்
22-7-1922

விண்ணில்
23-11-1979

நீ பிரிந்து ஆறு மூன்று ஆண்டு சென்றதப்பா
நினைக்கின்றோம் உந்தனையே எந்நாளும்
தந்தையில்லா மக்களாய் வாழும் நாங்கள்
தரணியெங்கும் உன் முகத்தைத் தேடுகின்றோம்.
ஓவியமாய்த் திகழுகின்றாய் உன் முகத்தைக் காணோம்.
ஓர் முறைதான் எமைக்காண ஓடோடி வாராயோ!



செல்வன் J. உதயபிரசாத்
(சென். பற்றிக்ஸ் கல்லூரி
பழைய மாணவன்)

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 18-5-1970 | 8-9-1986 |

என் செல்வ மகனே உதயா
உன் அன்பு முகமிழந்தோம்.
ஆசை மொழியிழந்தோம்.
பத்து ஓர் ஆண்டு ஆனாலும்
பாசம் வைத்த நெஞ்சமெல்லாம்
பரதவித்து வாடுதையா
இத்தரையில் நின்வதனம்
இனியெப்போ காண்போம்
யாம்.

கண்ணீர்ப் பூக்களால் அஞ்சலி செய்யும்
மனைவி – தாய்
மக்கள் – சகோதரிகள்

A/55/97

31, கார்மேல் வீதி,
யாழ்ப்பாணம்.

---

ஜீவியத்தில் நேசித்தோம் மரணத்திலும் மறவோம்



27-11-95



10-11-87



26-05-96



21-08-94

திரு. மரியாம்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை
திருமதி. செபஸ்தியாம்பிள்ளை ஜேற்றூட்டம்மா
திரு. நீக்கிலாப்பிள்ளை சுவாம்பிள்ளை
செல்வி. ஆசிர்வாதம் மேரிகிறேஸ் மதுரம்

வானவர்கள் வாழுலகில்
வல்லவரின் அடி நிழலில்
நீங்கள் இருக்க வென
நிர்மலனை வேண்டுகின்றோம்.

இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 27 . 11 . 97 அன்று காலை யாழ். புனித மரியன்னை பேராலயத்திலும், முற்பகல் கார்மேல் மாதா ஆலயத்திலும் இடம்பெற்ற திருப்பலிகளில் பங்குகொண்டு செபித்த அன்பு நெஞ்சங்களுக்கு எம் இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்து நிற்கின்றோம்.

மவுண் கார்மேல் வீதி,
யாழ்ப்பாணம்.

A/60/97

திரு. திருமதி எஸ். எவ். சவுந்தரமும்
பிள்ளைகளும்

---

2ஆம் ஆண்டு நினைவு



செல்வி றோசலின் தவமணி
சூசைப்பிள்ளை

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 26.11.1943 | 19.11.1995 |

இடப்பெயர்வு உமை நாங்கள்
இழத்தற்கே உற்றதோ!
ஜடங்களென நாதியற்று
நாமிருந்த வேளை
மிருசுவிலில் உம்மையிழந்த
துயர் கொடிது.
வெள்ளையுள்ளத் தூயவளே
தவமகளே தவமணி நீ
இறைபதத்தே இளைப்பாறு.
— உன்
நினைவுதனை நெஞ்சிருத்தி
நீர்வழியும் விழிகளுடன்
நிதம் கழியுதெம் வாழ்வு.

பிரிவால் துயருறும்
தாய், சகோதரர், சகோதரிகள்,
பெறாமக்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்
இல. 5 மாட்டீன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

A/53/97

---

விண்ணக வாழ்வில்
2ஆம் வருட நிறைவு



செல்வி. அருளம்மா மார்க்
மறைவு: 07-11-1995

நவாலி தெற்கு
மானிப்பாய்.

பொதுப்பணிகள் பல செய்து மக்களின் மனதில் நிறைந்த உம்மை என்றும் மறவோம். உமது ஆன்மா சாந்தியடைய இறைவனைத் தினமும் மன்றாடுகின்றோம்.

திருமதி. லில்லி யேசுதாசன்
54 லில்லி அவெனியூ,
வெள்ளவத்தை.

A/52/97

---

## விசுவாசத்தின் புதிய விடியல்

1995 இல் நடந்த தேசிய மேய்ப்புப்பணி மாகாநாட்டின் நிலையியல் அறிக்கைகள் "விசுவாசத்தின் புதிய விடியல்" என்னும் தலைப்பில் புத்தகமாக அழகுற அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

"புதுப்பிக்கப்பட்ட பகிர்ந்து வாழும் திருச்சபையை நோக்கி" என்னும் மேற்படி நிலையியல் அறிக்கைகளைச் செயற்படுத்தும் பொறுப்பு மறைமாவட்டங்களிடம் விடப்பட்டுள்ளது.

---

6ஆம் வருட நினைவு



மேரி மாகிறெட்
பஸ்ரியாம்பிள்ளை

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 05.04.1912 | 19.11.1991 |

உமது இறப்பின் 6ஆம் வருட நிறைவில் உம்மை அன்புடன் நினைவு கூருகிறோம். எமக்காகவும் எம் குடும்ப அங்கத்தவர்கள் ஒவ்வொருவருக்காகவும் இறைவனிடத்தில் பரிந்து பேசியருளும்.

குடும்ப அங்கத்தவர்கள்
புது வீதி,
யாழ்ப்பாணம்.

A/51/97

---

நெஞ்சைவிட்டகலா நினைவலைகள்

| சுவானி மிக்கேல்பிள்ளை | | சிங்கராயர் அருள்வளன் |
|---|---|---|
| 1913-9-29 | மண்ணில் | 1972-4-3 |
| 19-7-12 19 | விண்ணில் | 1990-10-21 |

அல்லும் பகலும் அயராதுழைத்து எம்மை
அன்புடனும் பண்புடனும் வாழ வைத்த
எங்கள் அன்புத் தெய்வமே!
ஆண்டவனடியினை தானடைந்து
ஆண்டுகள் இருபது சென்றதையா!
தங்கள் வழி தொடர்ந்து அன்புப் பேரனும்
நற்பண்புகளுடன் நீடுழி வாழ்ந்திடுவான் என்று
நாம் எண்ணியிருந்த வேளையிலே
எம்மையெல்லாம் ஏங்க வைத்தே
ஏகனடி சென்று ஏழாண்டுகள் சென்றதுவே
நித்தமும் உங்களிருவர் பிரிவை எண்ணி வாடுகிறோம்.
நீவிருவர் நிமலனடி நித்தியமாய் இளைப்பாற
நித்தமும் நாம் வேண்டுகின்றோம்.

அன்புடன் நினைவு கூரும்

அன்பு மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

அன்பு அப்பா, அம்மா
தங்கைமார், தம்பி
உற்றார், உறவினர்

4ஆம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை.

A/50/97

# "சமாதானத்தை எமக்கு யாருமே தரமுடியாது"

★ சமாதானப் பேரணியில் யாழ். ஆயர்

**நீதி, சமாதான ஆணைக்குழுவால் ஒழுங்கு செய்யப்பட்ட சமாதானப் பேரணியில் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கலந்து கொண்டு மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

யாழ். நகரின் பல பாகங்களிலிருந்தும் வந்த சமாதானத்திற்கான செபப் பேரணி யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் கூடியபோது ஆயர் தொடர்ந்தும் பேசுகை யில் மின்சாரம், தொலைபேசி போக்குவரத்து வசதிகள் உணவுப் பொருட்கள் கிடைத்தவுடன் சமாதானம் வந்துவிட்டது என எண்ணுகின்றோம். எமக்கு சமாதானத்தை யாரும் தரமுடியாது. அந்த சமாதானத்தை நாங்களாகவே பெற்றுக் கொள்ளவேண்டும். அந்த சமாதானத்தை நாங்களே மற்றவர்களுக்கும் கொடுக்கவேண்டும். இதற்கு ஒரேவழி, நாம் சமாதானத்தின் கருவிகளாக மாறுவதே என்று தெரிவித்தார்.

## அப்போஸ்தலிக்க கார்மேல் சபையினரின் பொன் விழா 1947—1997

அப்போஸ்தலிக்க கார்மேல் சபையினர் யாழ் மறைமாவட்டத்தின் அச்சுவேலிப் பங்கில் தமது பணியை ஆரம்பித்த 50 ஆண்டுகளின் நிறைவை டிசம்பர் 13 ஆம் திகதி கொண்டாடினர். யாழ் ஆயர் அவர்களின் தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு அவர்களின் பணிக்காக இறைவனுக்கு நன்றி செலுத்தப்பட்டது.

அப்போஸ்தலிக்க கார்மேல் சபையினர் இலங்கை மண்ணில் தமது 75 வது ஆண்டு காலப் பணியை நினைவு கூரும் வேளையில் யாழ்ப்பாண மண்ணில் அவர்களது 50 ஆண்டு காலப் பணி நினைவு கூரப்படுவது குறிப்பிடத்தக்கது. 14--3-97 பாதுகாவலன் பத்திரிகையில் இவர்களின் சிறப்பிதழ் வெளியிடப்பட்டது.

## மன்னாரில் குருப்பட்டம்

அருட் சகோதரன் நீ. பாக்கிய றஞ்சிற் கடந்த மார்கழி 17 ஆம் நாள் மன்னார் ஆயர் பேரருள் திரு இராயப்பு ஜோசவ் ஆண்டகையால் குருவாக திருநிலைப் படுத்தப்பட்டார். மேற்படி குருத்துவ திருநிலைப் படுத்தும் வைபவம் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

புதிய குரவர் அருட்திரு நீ. பாக்கிய றஞ்சிற்றின் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

## அப்போஸ்தலிக்க கார்மேல்சபை கன்னியரின் வெள்ளிவிழா

இவ்வாண்டு தமது பணியின் 25 ஆண்டுகள் நிறைவை அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் நான்கு கன்னியர்கள் நன்றியோடு நினைவு கூர்ந்தனர்.

அருட்சகோதரி டெலா றோஸ் அன்ரன்
அருட்சகோதரி மரிய புஸ்பமலர் இராயப்பு
அருட்சகோதரி மேரி பரமேஸ் பொன்னையா
அருட்சகோதரி மரியமலர் யோசவ்

இன்னும் பல காலம் பணி சிறக்க பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

## "யேசு இராகம்" திருப்பாடல் போட்டி

கொழும்பு புனித கொட்டாஞ்சேனை பங்கின் புனித டொன் பொஸ்கோ இளைஞர் முன்னணியினர் அண்மையில் புனித பெனடிக்ற் கல்லூரி மண்டபத்தில் "இயேசு இராகம்" என்னும் திருப் பாடல் போட்டியினை நடத்தினர்.

இந் நிகழ்வின் பிரதம அதிதியாக அருட்தந்தை பிரகாஷ் பெனாண்டோ அவர்களும் சிறப்பு விருந்தினராக தேன் மதுரைத் தமிழோசையின் பணிப்பாளர் திரு S. தில்லைநாதனும் கலந்து சிறப்பித்தனர்.

14 குழுக்கள் பங்குபற்றிய இப் போட்டியில் சிறந்த பாடற் குழுவாக கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருப்பாடற் குழு தெரிவு செய்யப்பட்டது. இரண்டாவது மூன்றாவது ஆக முறையே கொச்சிக்கடை புனித அந்தோனியார் இளைஞர் முன்னணியினரும் கொட்டாஞ்சேனை புனித மைக்கேல் குழுவினரும் தெரியப்பட்டனர்.

( தொடர்ச்சி 7ஆம் பக்கம் )

## "பாதுகாவலன்" ஆதரவில் பத்திரிகையாளர் சங்கத்தினருக்கு ஒளி விழா

இடம்: மறைக்கல்வி நடுநிலையம்
காலம்: 28 - 12 - 97 ஞாயிறு காலை 10 மணி (பு.நே.)
பிரதமவிருந்தினர்: யாழ் ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம்
சிறப்புவிருந்தினர்: து. வைத்திலிங்கம் (மேலதிக அரச அதிபர்)
வரவேற்புரை: அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை (பாதுகாவலன் ஆசிரியர்)
நத்தார் கீதம்: யாழ் புனித மரியன்னை பேராலயம்
நாடகம்: திருமறைக்கலாமன்றம்
பாடல்: புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தினர்.
நன்றி உரை: செ. யோசப் பாலா

ஆலோசனைக் குழு
பாதுகாவலன்

## இலங்கையின் அப்போஸ்தலர் தினம்

16—01—98



இலங்கையின் அப்போஸ்தலர் ஆசாரத்திற்குரிய யோசவ்வாஸ் அடிகளின் தினம்

தை மாதம் 16ஆம் நாள் என்பதை நினைவூட்டுகிறோம். அத்தினத்தை சிறப்பான விதமாக அனுசரிக்கும் படியும் விரைவில் புனிதர் பட்டம் கிடைக்க செபிக்கும் படியும் வேண்டுகிறோம்.

எமது மண்ணிற்கு அமைதியும் சமாதானமும் கிடைக்க யோசவ்வாஸ் அடிகளிடம் செபிப்போம்.

அருட்திரு. G. பிலேந்திரன்

தலைவர்
புனித யோசவ்வாஸ்
யாழ் மறைமாவட்டக் குழு.

## மன்னார் ஆயரின் சுற்றுமடலில் இருந்து

மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு இராயப்பு யோசவ் ஆண்டகை மன்னார் மறைமாவட்ட இறை மக்களுக்கான திருவருகைக்கால திருமடலில்

எமது பங்குகளின் அனைத்து வளர்ச்சிக்கும் அடித்தளமாக அன்பியங்களும், ஆலய மேய்ப்புப் பணிச் சபைகளுமே அமையப்போகின்றன. இவற்றின் வளர்ச்சியைத் துரிதப்படுத்த 1998ஆம் ஆண்டு குடும்பங்களை மையமாகக் கொண்டு மேய்ப்புப் பணித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அதற்காக மறை மாவட்டத்தின் எல்லாக் குருக்களும், பங்குகளில் இருந்து சில துறவறத்தோர், பொதுநிலையினரும் ஆயர் தலைமையில் 1998ஆம் ஆண்டு தை மாதத் தொடக்கப் பகுதியில் மன்னாரில் ஒன்று கூடுவர் எனத் தெரிவித்துள்ளார்.

## வன்னி பற்றி ஆயரிடம் கேட்டபோது....

வன்னிக்கு மடுதான் ஒரே வழியாக உள்ளது. மடுவில் இருந்து முளங்காவில், வலைப்பாடு, ஜெயபுரம் போய் புதுக்குடியிருப்பில் தங்கி அங்குள்ள குருக்களைச் சந்தித்தேன். பின் அமதிபுரம் வந்து தங்கி நின்ற அந்தப்பகுதிக் குருக்களைச் சந்தித்தேன். எல்லாப் பங்குகளுக்கும் போக முடியவில்லை. ஆனால் எல்லாக் குருக்களையும் துறவிகளையும் சந்தித்தேன். ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை தொடர்ந்தால் என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பது பற்றிக் கலந்தாலோசித்தோம்.

மக்கள் இன்னும் பெருந்துன்பம் அனுபவிக்கின்றனர். கடும் மழையும், மலேரியாவும், மருந்தின்மையும் வருத்தங்களும் மக்கள் வாழ்வை பெரிதும் பாதித்துள்ளன,

இந்திய இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்தவர்களுக்கு ஒரு நிவாரணமும் கிடைக்காதபடியால் கியூடெக் ஒரு முறை எவ்வளவு செலவு வந்தாலும் உதவவேண்டும்

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

## அமலமரித்தியாகிகள் சபை மறைபரப்புப்பணிக்காகவே நிறுவப்பட்டது

★ அதிவண. மார்சலியோ சாகோ

அமலமரித் தியாகிகள் இலங்கை மண்ணில் பணி புரிந்த 150 ஆண்டுகளின் நிறைவு கொழும்பு — மருதானை பத்திமா மாதா ஆலயத்தில் நன்றித் திருப்பலியுடன் கொண்டாடப் பட்டபோது அமலமரித் தியாகிகளின் அதி சிரேஷ்ட தலைவர் அதி வண. மார்சலியோ சாகோ அடிகள் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் பேசுகையில் அமலமரித் தியாகிகள்சபை சமூக சேவைக்காக அல்ல. மறைபரப்புப் பணிக்காகவே நிறுவப்பட்டது.

நற்செய்தி அறிவிப்பின் போது அது சமூக நீதியையும் கவனத்தில் எடுத்துக் கொள்கின்றது என்றார். மேற்படி திருப்பலியில் பாப்பரசரின் பிரதிநிதி, பேராயர், யாழ் ஆயர், பதுளை ஆயர் ஆகியோர் கலந்து கொண்டனர். அமலமரித்தியாகிகள் முதலில் யாழ் மண்ணில் வந்து இறங்கி தம்பணியை ஆரம்பித்து பின்னர் கொழும்பிற்கு நகர்ந்தது குறிப்பிடத்தக்கது.

யாழ் நகரிலும் மேற்படி கொண்டாட்டத்திற்கான ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

ஜனவரி 18, 1998 இல் யாழ் பேராலயத்தில் அதி. வந். மார்சல்லோ சாகோ அ.ம.தி. அடிகளாரின் தலைமையில் கூட்டுத் திருப்பலியாக மாலை 4.00 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும் இந் நிகழ்வில் ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் யாழ் மறை மாவட்ட எல்லாப் பங்குத் தளங்களையும் பிரதிபலிக்கும் முகமாக ஏராளமான கிறீஸ்தவர்களும் சமூகம் தருவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

சபை முதல்வர், குருக்கள், துறவியர், குருமாணவர் போன்றோரை சந்தித்து உரையாற்றவும் திட்டமிடப்பட்டுள்ளது.

19 ஆம் நாள் (திங்கட் கிழமை) யாழ் திருமறைக் கலா மன்ற அரங்கில் மாலை 4 00 — 6.30 மணிவரை ஜூபிலி விழா கலை நிகழ்வும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

யாழ் திருச்சபையின் சிற்பிகள் என்று கருதப்படும் அமலமரித்தியாகிகள் மிசனரிமாராக வெளிநாடுகளில் இருந்து

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

## கணணி மயப்படுத்தப்பட்ட திருவழிபாட்டு நாட்காட்டி கண்கவர் வர்ணங்களில்!!

★ உங்கள் பிரதிகளுக்கு இன்றே முந்துங்கள்.

★ புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தின் கணணிப் பிரிவினரால் முற்றிலும் வடிவமைக்கப்பட்டது.

★ ஒவ்வொரு மாதத்திற்குரிய புனிதர்களின் படங்களுடனும், மறை மாவட்ட விபரங்களுடனும் வெளிவருகின்றது.

விலை ரூபா 50

## இன்றைய இளைஞர்களுக்கு சமூகப் பார்வை அவசியம்.

### ★ இளையோர் தினத்தில் யாழ் ஆயர்

யாழ் மறைக் கோட்ட இளையோர் தினம் புனித பத்திரிசியார் கல்லூரியில் நடைபெற்ற போது யாழ் ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்த தன்னுடைய இளைஞர்களுக்கான உரையில் அவர் "நீங்கள் கிறீஸ்தவ இளைஞர்கள், நீங்கள் திருச்சபையின் உறுப்பினர்கள். இன்றைய இளைஞர்களாகிய உங்களுக்கு சமூகப் பார்வை அவசியம். இன்றைய துன்ப சூழ்நிலையில் சுயநலன்களைக் களைந்து அன்புப்பணி புரிய சமூகப் பார்வை கொண்டவர்களாகப் புறப்படுங்கள்" என்றார்.

## வன்னி பற்றி...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று திட்டமிட்டோம். காலைவேளைகளில் மாணவர்களுக்கு இலைக் கஞ்சி வழங்கப்படுகிறது. முளங்காவிலில் கிடுகு உதவி செய்யப்பட்டது. நத்தார் புதுவருடம் வருகிறது என்று இராணுவத்தினரிடம் விசேட உத்தரவு பெற்றுபால் உணவும் கொப்பி, புத்தகங்களும் கொண்டு செல்ல ஒழுங்கு செய்தோம்.

**ஆயர் மன்றத்தில் நடந்தது என்ன என்று கேட்ட போது ...**

வருகிற ஆண்டு தூய ஆவியின் ஆண்டுத் தொடக்கத்தில் இறைமக்களுக்குத் திருமுகம் ஒன்று வரைவது முடிவு எடுக்கப்பட்டது.

கண்டி தேசிய குருமட நிலமைகளை ஆராயச் சென்ற குருக்கள் அங்கு குருமாணவர்கள் அதிகம் என்றபடியால் மெய் இயல் இறை இயல் பகுதிகளை இயன்றவரை பிரித்து செயற்படுத்தவேண்டும் என ஆயர் மன்றத்திற்குச் சிபாரிசு செய்தது.

நாட்டு நிலமைகளைப் பற்றிப் பேசிய பேராசிரியர் G.L. பீரீசுடன் சில ஆயர்கள் சந்திக்க ஒழுங்கு செய்யப்பட்டது. அச்சந்திப்பின் போது தீர்வுத்திட்டம் பற்றியும், அதன் குறைபாடுகளும் பேராசிரியருக்கு விளக்கப்பட்டன. தீர்வுத் திட்டம் புலிகளுக்கும் முன்வைக்கப்பட்டுத் தீர்வு விரைவில் காணப்பட வேண்டும் என வற்புறுத்தப்பட்டது. புத்த சமயத்தின் இடம் பற்றியும் பேசப்பட்டது. அப்போ மகாசங்கத்தினர் தேவை என்றால் மட்டுமே கலந்தாலோசிக்கப் படுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

**கொழும்பில் வேறு என்ன செயற்பாடுகள் நடந்தன என்று கேட்ட போது ...**

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் சோமபால குணதிரவை நான் சந்தித்து யாழ்ப்பாண மக்களுக்கு கப்பல் வசதி போக்கு வரத்திற்குச் செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன்.

யூபிலி ஆண்டுக் கூட்டம் நடைபெற்றது. அதிலும் பங்கு பற்றி யாழ் மறை மாவட்டத்தின் யூபிலி பற்றிய செயற் பாடுகளையும் திட்டங்களையும் தெரியப் படுத்தினேன். கிளி—முல்லை மறைக் கோட்ட முதல்வர் அருள்திரு இருதயதாஸ் அடிகளும் கூட்டத்தில் பங்குபற்றினார். 1998 ஆம் ஆண்டிற்குரிய தூய ஆவியின் புத்தகம் வெளியிடப் பட்டது.

திருவழிபாட்டு ஆணைக் குழுவின் கூட்டத்தை தலைவர் என்ற வகையில் கூட்டினேன். திருவழிபாட்டுக் கலண்டர் ordo என்பவற்றோடு வேறு பல திட்டங்களும் போட்டோம்.

## ஆயரின் கிறிஸ்மஸ் திருப்பலி வானொலியில்.

எதிர்வரும் கிறிஸ்மஸ் தினத்தில் யாழ் மரியன்னை பேராலயத்தில் காலை 6.15 மணிக்கு ஆயரின் தலைமையில் நடைபெறும் கூட்டுத் திருப்பலி வானம்பாடி வானொலியில் ஒலிபரப்பப் படவுள்ளது.

## புதிய அதிபர்

### அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை



கடந்த ஒன்றரை ஆண்டுகளாகப் புனித வளனார் அச்சகத்தில் அரும் பணியாற்றிய அதிபர் அருள்திரு அன்ரன் மத்தாயஸ் அவர்களின் பதவிக்கு மார்கழி முதலாம் நாள் முதல் அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை அவர்கள் நியமனம் பெற்றுள்ளார்.

அதிபர்கள் இருவரையும் அச்சகத்தின் பேரால் இதய பூர்வமாக வாழ்த்துகின்றோம்.

## தினகரன் பத்திரிகையில் 'கிறிஸ்தவமஞ்சரி'

ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் தினகரன் பத்திரிகையில் கிறிஸ்தவ மஞ்சரி என்னும் ஒரு பகுதி வெளிவரத் தொடங்கியிருக்கிறது. இப்பகுதியை திருமதி பற்றிசியா ஆரோக்கியநாதர் பொறுப்பேற்று நடத்துகிறார். உங்கள் ஆக்கங்களும் வரவேற்கப்படுகின்றன.

## இயேசு இராகம்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிறந்த இசையமைப்பாளராக திரு A. J. பொஸ்கோ அவர்களும், சிறந்த பாடலாசிரியராக திரு B. J. வினிஸ்ரன் பர்ணாந்து அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

கடந்த 11 வருடங்களாக இசைப் போட்டியினை புனித டொன்பொஸ்கோ இளைஞர் அணியினர் நடாத்தி வருகின்றனர் என்பதுகுறிப்பிடத்தக்கது.


— அருட்சகோ. காந்தன் —

## கேட்கத் தவறாதீர்கள் வானம்பாடி வானொலியில் பாதுகாவலன் சிறப்பு நிகழ்ச்சி

எதிர் வரும் நத்தார் பண்டிகையை முன்னிட்டு இலங்கையின் முதல் கத்தோலிக்க வார ஏடான பாதுகாவலன் வழங்கும் நத்தார் சிறப்பு நிகழ்ச்சியை கேட்கத் தவறாதீர்கள். வானம்பாடி வானலையில் 24.12.97 அன்று புதன் இரவு 9-15 முதல் 9.30 வரை நடைபெறும.

## பொன்விழா நாயகனை வாழ்த்துகிறோம்!

### அருள்திரு R. அன்ரன் மத்தாயஸ்



பிறப்பு: 10 - 04 - 1948

குருத்துவம்: 06 - 01 - 1973

**பணிகள்**

1974 – 1975: உதவிப்பங்குத் தந்தை பெரிய கோவில்.

1975 – 1979: பங்குத்தந்தை உயிலங்குளம்.

1979 – 1986: அதிபர், புனித மாட்டீனார் குருமடம், ஆசிரியர் (பாதுகாவலன்) முகாமையாளர், புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், யாழ். பல்கலைக்கழகம்,

1986 – 1993: நல்லாயன் நிலையம், யாழ்.பல்கலைக்கழகம்,

1993: பங்குத்தந்தை புனித ஆசீர்வாதப்பர் ஆலயம்.

முன்னாள் கத்தோலிக்க அச்சக முகாமையாளராகவும் "பாதுகாவலன்" பத்திரிகையின் ஆசிரியராகவும் அரும்பணியாற்றிய அருள்திரு அன்ரன் மத்தாயஸ் அவர்களிற்கு, காவலனின் அன்பும், தமிழ்ப் பண்பும் நிறைந்த வாழ்த்துக்கள்!

## அமலமரித் தியாகி...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

வந்தோரும் தாயகத்தைச் சார்ந்தோரும் ஆலயங்கள் பள்ளிகள், குருமடங்கள், அச்சகங்கள் போன்ற நிறுவனங்களை ஏற்படுத்தி சமய, சமூக பணியால் மறைவளர்த்த பெருமையுடையோர் இவர்களது 150 ஆண்டு பணி உண்மையில் ஒரு நன்றி விழாவிற்கு தகுதியுடையதே.

## எதிர்பாருங்கள்!

அமலமரித்தியாகிகளின் 150 ஆண்டு நிறைவின் நினைவாக அடுத்த பாதுகாவலன் சிறப்பிதழாக மலர இருக்கிறது.

## இலவசம்

கிறிஸ்மஸ் புத்தாண்டை ஒட்டி கிறிஸ்மஸ் விசேட இணைப்பும், கண்கவர் கலண்டர் ஒன்றும் இந்த இதழ் பாதுகாவலனுடன் இணைக்கப்பட்டுள்ளன.

## பணியின் 25 ஆண்டுகள்



அருட்சகோதரி மரியமலர் யோசவ் அ.க.

1972 — 1997

இறைபணியில் இருபத்தைந்து ஆண்டுகள் நிறைபணி ஆற்றி தன்னை அர்ப்பணித்த எம் அருமை சகோ. மரியமலர் யோசவ் அவர்களுக்கு எம் இதயம் நிறைந்த வாழ்த்துக்கள்.

அன்பு அன்னை, சகோதரர்கள்.


## புனித வளன் கத்தோலிக்க விற்பனை நிலையம்

### St. Joseph's Catholic Sales Centre

- செபமாலை ... சுரூபங்கள்
- செபப்புத்தகங்கள் ... சமய நூல்கள்
- பிளாஸ்ரிக்கினாலான அழகு வர்ண மலர்கள்
- பிறந்தநாள் வாழ்த்து, திருமண நாள் வாழ்த்து. குருப்பட்ட நாள் வாழ்த்து, நன்றி வாழ்த்து போன்ற இன்னும் பல வாழ்த்து மடல்களும்,
- கொப்பி வகைகள், அதிரடிப் பேனாக்கள், கலர்ப் பெட்டிகள், உலக—இலங்கைப் படங்கள் மற்றும் சகலவிதமான பாடசாலை உபகரணங்களும் எமது விற்பனை நிலையத்தில் சகாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.


## புதிய நியமனங்கள்

| | | |
|---|---|---|
| அருள்திரு | B. F. பொணிபஸ் | — பங்குத்தந்தை, குருநகர். |
| அருள்திரு | R. M. G. நேசநாயகம் | — பங்குத்தந்தை, சாவகச்சேரி. |
| அருள்திரு | பற்றிக் ஞானப்பிரகாசம் | — அமல உற்பவம், கொழும்புத்துறை. |
| அருள்திரு | ரூபன் மரியாம்பிள்ளை | — அதிபர், புனித வளன் கத்தோலிக்க அச்சகம். |

பருத்தித்துறை மறைக்கோட்டத்தில்

# இரண்டாயிரம் யூபிலி ஆண்டு ஆயத்தக் கருத்தரங்கு

அச்சுவேலி, பருத்தித்துறை, கரவெட்டி ஆகிய பங்குகள் ஒன்றிணைந்து பருத்தித்துறை புனித தோமையார் ஆலயத்தில் (22.11.97) சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் மறைக் கோட்ட முதல்வர் அருட்திரு. P. M. இம்மனுவேல் அடிகளார் தலைமையில் கருத்தரங்கு ஆரம்பமானது.

யாழ்ப்பாணம் புனித சவேரியார் குருமட அதிபரும் யூபிலி ஆண்டு ஆயத்தங்களுக்கு பொறுப்பானவருமான அருட்திரு J. நீக்கிலஸ் "கிறீஸ்துவுக்கும் தந்தைக்குமுள்ள உறவு" எனும் தலைப்பிலும், மறையாசிரியர் இ. ம. ஜெயசீலன் "சீடத்துவம்" எனும் தலைப்பிலும், குருமட விரிவுரையாளர் அருட்திரு போல் றோகான் "இன்று எமக்கு யேசு யார்?" எனும் தலைப்பிலும் கருத்துரைகள் வழங்கினர்.

யூபிலி ஆண்டு ஆயத்த காலத்தில் பருத்தித்துறை மறைக் கோட்டத்தில் நடந்த கருத்தரங்கு இது என்பது குறிப்பிடத் தக்கது.

A. M. மஞ்சுரிக்கா
கரவெட்டி

# வாசக அன்பு நெஞ்சங்களுக்கு

98 தைமுதல் பாதுகாவலன் மாதம் இரு தடவை புதுப் பொலிவுடன் வெளிவருவான் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

(1) இதுவரை சந்தாப்பணம் கட்டாதவர்கள் எல்லோரும் தயவுசெய்து உடனடியாக பணத்தைக் கட்டும்படி அன்போடு வேண்டுகோள் விடுக்கின்றோம். பணம் கட்டாதவர்களுடைய பிரதிகள் 97 மார்கழி இதழுடன் நிறுத்தி வைக்கப்படும் என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கிறோம்.

(2) பாதுகாவலன் இன்னும் பெற்றுக் கொள்ளாதவர்கள் உடனடியாக புனித வளனார் அச்சகத்திலுள்ள பாதுகாவலன் பணிமனையில் தொடர்பு கொள்ளவும்.

(3) கிளி - முல்லை மறைக் கோட்டத்திற்கான பாதுகாவலன் தனிப்பட்ட பிரதிகளை அனுப்புகிறோம். பெற்றுக் கொள்ளாதவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

(4) மன்னார்-கொழும்பு-திருமலை-மட்டுநகர், கண்டி-பதுளை போன்றதமிழ்மறைமாவட்டங்களுக்கும் விமான மூலம் பாதுகாவலனை அனுப்பி வைக்க இருப்பதால் மேற்படி இடங்களிலுள்ள பழைய வாசக அன்பு நெஞ்சங்களை எம்முடன் தொடர்பு கொண்டு பிரதிகளைப் பெற ஒழுங்குகளைச் செய்யும்படி அன்பு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

—ஆசிரியர்—

## பிறிதென்ன வேண்டுமெமக்கு

திவ்விய பலியினிலே திரிகரண சுத்தியொடு
தினமுமே பங்கு கொண்டால்— நன்மக்காள்
பிறப்பு மிறப்பு முயிர்வாழ்வும் கண்டிடுவோம்.
பிறிதென்ன வேண்டு மெமக்கு.

சில்லையூர் செல்வநாதன்.

## பாலன் இயேசு...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாழ்மை - ஏழ்மை - எளிமை என்பன மனித வாழ்வின் உள்ளார்ந்த ஆன்மீக வாழ்வின் கருவிகள். மனிதனிற்கு விடுதலையையும், மகிழ்வையும் அளிக்கின்ற ஆன்மீக ஏணிப் படிகள். இறைவன் செல்வரை வெறுங்கையராய் அனுப்புகின்றவர், உள்ளத்திலே செருக்குடன் சிந்திப்போரை சிதறடிப்பவர் என்ற மரியாளின் அனுபவம் உலகின் செல்வம், பணம், பொருள்கள் உடைமைகளே மனித வாழ்வின் மையம் என்று சிந்திக்கும் எமக்கெல்லாம் சவால்விடுக்கும் செய்தியாக அமைகின்றது. நான் வாழ்ந்தால் போதும், எனது அயலவன் எக்கேடுபட்டாலும் எனக்கு என்ன? எனது பணம், எனது பொருள் என்று குறுகிய வட்டத்திலே வாழ்ந்து செருக்குடன் சிந்திக்கும் எமக்கு கிறிஸ்துவின் பிறப்புச் செய்தி தாழ்மை — ஏழ்மை — எளிமை என்ற உயரிய சிந்தனைகளைத் தூண்டி எம்மிடம் இருப்பதைப் பகிர்ந்து, புதிய புனித மனிதர்களாக இரண்டாயிரம் ஆண்டை நோக்கிப் பயணம் செய்ய எம்மை அழைத்து நிற்கின்றது.

## 1 ம் ஆண்டு நினைவு



திரு யோ. செபஸ்ரியாம்பிள்ளை
அன்னை மடியில் 14 - 05 - 1929
ஆண்டவன் அடியில் 15 - 12 - 1996

ஓர் ஆண்டு மறைந்தாலும்
உங்கள் அன்பு நினைவுகள்
எம்மை விட்டு மாறாதையா.
குமுறி அழுகின்றோம் - எம்
கண்ணீரைத் துடைப்பார்
யாரையா
அன்புகொண்ட இறைவனிடத்தில்
பக்தியாய் மன்றாடுகின்றோம்
உம் ஆன்ம சாந்திக்காக!

உமது பிரிவால் வாடும்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.
கிளாலி,
எழுதுமட்டுவாள். A/61/97

## வி்ண்ணக வாழ்வின் 6ஆம் மாத நினைவு




திரு. அந்தோனிப்பிள்ளை யோசவ்
(இளைப்பாறிய ஆசிரியர்)
மலர்வு 19.03.1928
உதிர்வு 28.06.1997

மதுரமான யேசுவே! உமது திருவுளப்படி தேவரீர் உம்மிடம் அழைத்துக் கொண்ட அடியான் அந்தோனிப்பிள்ளை யோசவ் அவர்களின் ஆன்மாவிற்குக் குளிர்ச்சியும், பிரகாசமும், சந்தோஷமும், சமாதானமும் நிறைந்த ஸ்தலத்தைக் கட்டளையிட்டருளும்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிரான்சிஸ்கா யோசவ்
(இளைப்பாறிய ஆசிரியை)
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
21. மவுண்ட்கார்மேல் றோட்,
யாழ்ப்பாணம். A/59/97

## விண்ணக வாழ்வின் 3ஆம் மாத நினைவு



திரு சுவாம்பிள்ளை பேரின்பநாயகம் (அப்புச்சி)
அன்னை மடியில் 14-08-1934
ஆண்டவன் அடியில் 3-10-1997

நாங்கள் உங்களை அன்பு செய்தோம், இறைவன் உங்களை அதிகம் அன்பு செய்தார். சீவியத்தில் நேசித்தோம், மரணத்திலும் மறவோம்.

தந்தையே நீ எல்லாமே தந்தாய். தனையர் நாம் தளிர்க்க அன்பினைத் தந்தாய். மலர் போன்ற இதயம் உமக்கு.

மதுரமான யேசுவே! மரண பாக்கியம் அடைந்த உமது அடியான் சுவாம்பிள்ளை பேரின்பநாயகத்திற்கு நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மகள் மேரி லலிதா
R. C. லேன்
கரவெட்டி
A/54/97

## இரக்கமாய் வேண்டுவோமே!

இடப்பெயர் பின்னாண்டு
இரண்டு சென்றாலும்
இடர்கொண்ட அவ்வாண்டு
களை
இறை பாலனுக்காய் அர்ப்
பணித்து
இரண்டாயிரம் ஆண்டதனை
இனிய பொன்னாண்டாக
இகமதில் இருத்தி நேர்வழி
வாழவும்
இறைபால யேசுவின்
இவ்வுலக வரவிற்கு
இன்பமாக எம்மை செம்மை
யாக்கவும்
இன்பத் தமிழ் மண்ணின்
இழந்த பல உரிமைகளும்
இனிமையான யுகங்கள் பலவும்
இறப்பிலிருந்து உயிர்த்துவர
இறைபால யேசுவிடம்
இரக்கமாய் வேண்டுவோமே.

பா. அன்ரனி யேசுதாஸ்
யா / நெடுந்தீவு
மகாவித்தியாலயம்
A/L கலைப் பிரிவு 1999

## 3ஆம் ஆண்டு நினைவு

யோசப் சிமியோன்
பிறப்பு: 08-06-22
இறப்பு: 26-12-1994

கண்ணின் மணிபோல்
காத்திட்ட
கலங்கரை விளக்கே-
எம் தந்தாய்,
விண்ணில் நீரும் விரைந்தின்று,
மூன்று ஆண்டுகள்
ஆகினவோ?- நாம்
எண்ணில் அடங்கா
துயரடைய
எம்மை விட்டு
ஏன் சென்றாய்?

இவரின் ஆன்ம சாந்திக்காக 26.12.1997இல் புனித வளனார் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் பங்குகொண்டு எம் தந்தைக்காக செபிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
963/7 வளன்புரம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். A/62/97

## விண்ணக வாழ்வில் நாலு ஆண்டுகள்



A. B. பேரின்பநாயகம்
இளைப்பாறிய ஆசிரியர்
சம்பத்திரிசியார் கல்லூரி
தோற்றம் 25-11-1920
மறைவு 11-12-1993

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"
(அரு. 11.25)

சீவியத்தில் அன்பு செய்தோம்.
மரணத்திலும் மறக்க
மாட்டோம்.

"அன்பு, பண்பு எனும் பாசத்தில் அணையா ஒளி தீபமே" எங்களை விட்டு பிரிந்து ஆண்டுகள் நான்கு சென்றாலும் நினைவுகள் என்றும் ஆறாது,

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
ஏழாலை கிழக்கு,
ஏழாலை. A/57/97

## 4-ஆம் ஆண்டு நன்றி நினைவஞ்சலி
(03-12-1993 — 03-12-1997)



"உம்மை எமக்கு ஈந்தளித்த இறைவன் தம்முடன் என்றும் உம்மை வாழவைப்பார்."

'நித்திய இளைப்பாற்றியை இவருக்கு அளித்தருளும்'

உமது நினைவில் வாழும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
67/1, ரெம்பிள் றோட்,
யாழ்ப்பாணம்

LOURDES RAYMOND MUTHIAH A/63/97
லூர்து றேமன்ட் முத்தையா

## 2'ம்' ஆண்டு நினைவஞ்சலி




மேரி டீறிசா இமெல்டா
செல்வரட்ணம்

மண்ணில் 16 - 05 - 29
விண்ணில் 16 - 11 -

"உயிர்ப்பும் உயிரும் நானே;
என்னில் விசுவாசம்
கொள்பவன் இறப்பினும்
வாழ்வான்."
(அரு 11 : 25)

இவரின் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமகன்,
பேரப்பிள்ளை.
வளன் புரம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.
"நல்லாயன்ஸ்",
மோட்டக்கடை,
A/62/97 நாவாட்டான்.

# உலக நாடுகளில் நத்தார் கொண்டாட்டங்கள்



## அமெரிக்கா

நத்தார் தினத்தன்று சிறுவர்கள் தம் நீண்ட காலுறைகளை நத்தார் மரத்தில் தொங்க விடுவர். அவற்றினுள்ளே பெற்றோரும், பெரியோர்களும் பரிசுப் பொருட்களை இடுவர். பரிசுகளைக் கண்டு சிறுவர் மகிழ்வர். நத்தார் கேக்கும், பிஸ்கட்டுகளும் தயாரிக்கப்படும். நத்தாரன்று வீடுகளில் வான்கோழி சமைக்கப்படும். அமெரிக்காவின் ஹவாய் தீவுகளில் கிறிஸ்மஸ் காலம் மிகவும் உஷ்ணமாக இருக்கும். நத்தார் பலிப் பூசையை அடுத்து ஹவாய் தீவு மக்கள் தங்கள் மகிழ்ச்சியை விளையாட்டுகளிலும், சுற்றுலாக்களிலும் செலவழிப்பர்.

## தென் அமெரிக்கா

தென் அமெரிக்க நாடுகளில் நத்தார் காலத்தில் மிகுந்த வெப்பமிருக்கும். நத்தாருக்காக கடைகளுக்கு வரும் மக்களுக்கு அவர்கள் குளிர் பானங்கள் வழங்குவர். ஸ்பானிய ஆட்சி நிலவிய நாடுகளில் நத்தார் ஜனவரி 6 ஆம் திகதி கொண்டாப்படுகிறது. அன்றைவ தினம் ''திருக்காட்சி'' விழாவாகும். அன்று சிறுவர் ஒட்டகங்களுக்கு உணவு கொடுப்பர். மூன்று அரசர் பாலனைத் தரிசித்ததை இந் நிகழ்ச்சி பிரதிபலிக்கின்றது.

## மெக்ஸிகோ

இங்கு நத்தார் கொண்டாட்டம் டிசெம்பர் 16 தொடக்கம் ஜனவரி 6 வரை நடைபெறும். நத்தாருக்கு இரு வாரங்களுக்கு முன்னர் மக்கள் கூடைகள் பின்னுவர். நத்தாருக்கு வேண்டிய பொருட்களை இவற்றினுள்ளே இடுவர். ''பினற்றா'' எனப்படும் வர்ணக் கடதாசிகளால் அலங்கரிக்கப்பட்ட கப்பல், சப்பாத்து, பறவை, மீன் போன்ற வடிவங்களில் அமைந்த, உள்ளே சிறுவருக்கான பரிசுப் பொருட்கள் கொண்ட பெட்டிகளை உடைக்கும் நிகழ்ச்சியும் இடம் பெறும். கண்கள் கட்டப்பட்ட சிறுவர் பினற்றா (Pinata) பெட்டிகளை உடைத்து பரிசுப் பொருட்களைப் பெற்று மகிழ்வர்.

## இங்கிலாந்து

ஆங்கிலேயருக்கு நத்தாரைக் கொண்டாடுவதுடன் டிசெம்பர் 26 ல் ''பரிசுத் தினம்'' (Boxing Day) என்ற ஒன்றும் முக்கியமானதாகும். அன்றைய தினம் பரிசுப் பொருட்கள் அடங்கிய பெட்டிகளை வீடுகளில் மக்கள் வைத்திருப்பர். வருடம் முழுவதும் தமக்கு உதவி புரிந்த பாற்காரன், தபாற்காரன் ஆகியோருக்கு இப்பரிசில்களை வழங்கி மகிழ்வர். நித்திரையிலிருக்கும் சிறுவரின் காலுறைகளுக்குள் பரிசுகளைப் பெற்றோர் இடுவர். காலையில் துயிலெழுந்த சிறுவர்கள் பரிசுகளைக் கண்டு உண்மையில் நத்தார் தாத்தாவே தமக்கு அவற்றை அளித்ததாக எண்ணுவர்.

## ஸ்கொட்லாந்து

நத்தார் ''பனொக்ஸ்'' (Bannocks) என்னும் கேக் தயாரிக்கப்படும். இது தயாரிக்கும் போது இக் கேக் உடைந்து விட்டால் அதை அபசகுனம் என ஸ்கொட்டிஸ் மக்கள் கருதுவர்.

## அயர்லாந்து

ஐரிஸ் மக்கள் பாலன் இயேசுவை வரவேற்க வீடுகளிலுள்ள எல்லா ஜன்னல்களிலும் எரியும் மெழுகுதிரிகளை வைப்பர். அயர்லாந்தில் நத்தாருக்காக நீண்ட விடுமுறை விடப்படும்.

## பின்லாந்து

பின்லாந்து மக்கள் நத்தார் தினத்தன்று ஒற் (Oat) தானியத்தில் செய்த கஞ்சியை அருந்துவர்.

## இத்தாலி

இத்தாலியர் நத்தாருக்கு முன்தினம் விரதம் அனுஷ்டிப்பர். நத்தார் அன்று தின் பண்டங்கள் செய்து உண்பர். நத்தார் நள்ளிரவில் ஒவ்வொரு வீட்டிலுமுள்ள தாயானவள் நத்தார் குடிலில் Bambino எனப்படும் துணிகளால் பொதியப்பட்ட பாலன் இயேசுவை வைப்பாள். அந்நேரம் வீட்டிலுள்ள எல்லோரும் செபம் செய்வர். திருக்காட்சி விழாவுக்கு முன்பான இரவில் நத்தார் தாத்தா La Befana என்னும் பெண்ணுருவில் வருவார். அவரது ஒரு கையில் மணி ஒன்றிருக்கும். மணியோசை கேட்டதும் சிறுவருக்கு நத்தாரின் வருகை தெரிந்து விடும். மறு கையில் தடி காணப்படும். சிறுவர் தீச் செயல்களில் ஈடுபடாதிருப்பதை தடி அவர்களுக்கு நினைவூட்டும். பின்னர் அவர் பொதியொன்றில் அவர்களுக்குப் பரிசாக என்ன கொண்டு வருவார்? வெறும் சாம்பல் தான்!

## சுவீடன்

இங்கு நத்தார் டிசெம்பர் 13 ம் திகதியே ஆரம்பமாகிவிடும். டிசெம்பர் 13 புனித லூசியா தினம். அன்று காலை ஒவ்வொரு வீட்டிலுமுள்ள வயது குறைந்த சிறுமி வெள்ளை உடையினால் புனித லூசியா போன்று அலங்கரிக்கப்படுவாள். கைகளில் மெழுகுதிரி, மலர்ச் செண்டு தாங்கியவளாக வீட்டிலுள்ள அனைவருக்கும் காலை உணவைப் பரிமாறுவாள். அத்துடன் நத்தாரன்று Lutfisk என்னும் சுவீடனில் பிடிக்கப்படும் சிறந்த ரக மீன் கறி சமைத்துண்பர்.

## பெத்லகேம்

இங்கு டிசெம்பர் 16 ம் திகதி நத்தார் கொண்டாட்டம் ஆரம்பமாகிவிடும். அன்றில் இருந்து தொடர்ந்து ஒன்பது இரவுகள் ஒன்பது குடும்பங்கள் ஊர்வலமாக ஒவ்வொரு வீட்டிற்கும் செல்வர். ஊர்வலத்தின் முன்னே சிறுவனும், சிறுமியும் சூசை மரியாள் போன்று உடை அணிந்து செல்வர். முதல் எட்டு இரவுகளிலும் அவர்கள் தங்குவதற்கு அனுமதிக்கப்படுவர். அங்கு அவர்கள் இறைவனைப் புகழ்ந்து பாடுவர். இவ் ஊர்வலம் நசரேத்தில் இருந்து பெத்லகேம் வரை இடம் பெறும்.

ஈ. ஜே. பெஸ்லி, சுண்டிக்குளி.

# இலங்கையில் முதல் கிறிஸ்மஸ் விழா

போர்த்துக்கேயரின் வருகையுடன் ஐரோப்பிய நாகரீகம், பண்பாடு மட்டுமல்ல, அவர்களது சமயபாரம்பரியங்களும், வழிபாட்டு முறைகளும் சம்பிரதாயங்களும் நம் நாட்டில் அடியெடுத்து வைத்தன.

1505 ஆம்ஆண்டில் போர்த்துக்கேயர் முதன் முதலில் இலங்கையில் காலடி வைத்தனர். அன்றைய கொழும்புத் துறைமுகத்துக்கு அணித்தாய் கல்பொக்க எனுமிடத்தில் ஒரு தொழிற்சாலையை அமைத்தோடு தாங்கள் தங்குவதற்கு வீடுகளையும், கட்டினர். கப்பற் தளபதி லோறன்சோடி அல்மெயிடா தனது பெயர் கொண்ட புனிதரின் பெயரால் ஒரு ஆலயத்தையும் அமைத்தான். அந்த கொட்டிற் கோவிலிலே தான் 1505ஆம் ஆண்டு மார்கழி மாதம் 25ஆம் திகதி முதன் முதலில் கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்பட்டது. எனவே இலங்கையில் முதல் கிறிஸ்மஸ் 490 ஆண்டுகளுக்கு முன் கொண்டாடப்பட்டது.

புனித லோறன்ஸ் பெயரால் நிறுவப்பட்ட ஆலயமே இலங்கை வரலாற்றில் எழுந்த முதல் கிறிஸ்தவ ஆலயமாகும். வரலாற்றுக் குறிப்புகளின்படி எத்துல்கோட்டை என்னுமிடத்தில் கோட்டை அரசனான புவனேகபாகு பிரான்ஸிஸ்கன் சபைக்குருமாரின் வேண்டுதலுக்கிசைந்து ஒரு ஆலயத்தையும், குருமார் தங்குமிடத்தையும் அமைத்துக் கொடுத்தான் என்று கூறப்படுகின்றது. பிரான்ஸிஸ்கன்சபை மிஷனரிமாரே இலங்கைக்கு முதன் முதலில் வந்த கத்தோலிக்க மதகுருமாராவர். 1543ஆம் ஆண்டு எத்துல் கோட்டையில் வண. ஜோ. ஆடி விலாடி கொண்டோ எனும் பிரான்ஸிஸ்கன் குருவினால் முதல் நத்தார் திருப்பலி அன்று ஒப்புக்கொடுக்கப்பட்டது. அரச குடும்ப பிரதிநிதிகளும் இந்த முதல்நத்தார் விழாவுக்கு வந்திருந்தார்கள் என்பது வரலாறு.

A.M. மஞ்சுரிக்கா
கரவெட்டி.

## அன்பிற்கும்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வுகள் மனதை அலைக்கழிக்கின்றன.

டாக்டர்மார் யார், தாதிமார் யார், என வித்தியாசம் காண முடியாத அளவுக்கு அனைவருமே கடும் பச்சை வர்ண மேலாடையும், மூக்கையும் வாயையும் மறைக்கும் கவசமும் அணிந்து காணப்படுகிறார்கள். வாழ்வா சாவா என்ற போராட்டம் ஆரம்பிக்கப் போவதை எண்ணும் போது ஒருவித அச்சம் என்னை ஆட்கொண்டாலும் இறைவனிலே அமைதி அடைகிறேன். ''இறைவா, உம் கரங்களிலே என் ஆவியை ஒப்படைக்கிறேன்.'' என் வாய் என்னையறியாமலேயே இவ்வாறு முணு முணுக்கிறது மீண்டும் என் சொந்தங்கள், பாசங்களுக்கான முகங்கள்... அன்பு உள்ளங்கள்... என் மனக் கண்களில் ''இறைவா உம் கரங்களில் என்.. ஆவி...

அதன் பின் எனக்கு என்ன நடந்ததோ தெரியாது. இரவு 10.00 மணி வரை சுமார் 14 மணித்தியாலங்கள் சுய நினைவின்றி இருந்திருக்கின்றேன்.

இது அபாயமான சத்திர சிகிச்சை என டாக்டர் கூறியிருந்தும் இறை இரக்கத்தால் நான் இன்னும் வாழ்கிறேன். அவரது வல்லமை மிக்க குணப்படுத்தும் கரங்களால் நான் தொடப்பட்டதை உணர்கிறேன். எனக்காக எத்தனையோ பேர் தொடர்ந்து செபித்ததாக கூறினார்கள்.

இறைவன் நிச்சயம் எம் மன்றாட்டுக்கு செவிசாய்ப்பார் என்பதை அனுபவத்தால் கண்டு உணர்கிறேன்.

அதிசயமாக சுகம் தந்த இறைவனுக்கு நன்றியாக என் வாழ்வை அர்ப்பணிக்கிறேன்.

(உண்மைச் சம்பவம்)

## மன்னார் ஆயரின்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறுக்கு வழியில் மிக விரைவில் பணத்தைப் பெருக்க வேண்டுமென்ற தவறான ஆசையோடு பலர் செயற்படுவதனால் நீதியற்ற முறையில் பணம் சேகரித்தல், இலஞ்சம் போன்ற ஊழல்களுக்கு அடிமைப்படல்; போதை வஸ்துக்கள்; வடிசாராயம் போன்ற வியாபாரங்களில் ஈடுபடுதல் எனும் மனித அழிவுச்செயல்கள் கட்டுப்பாடற்ற விதத்தில் பெருக்கெடுத்து வருகின்றன. இது நமக்கு பெரும் வேதனையையும் எதிர்காலத்தைப் பற்றி ஆழமாகவும் தீர்க்கதரிசனத்தோடும் சிந்திக்க வேண்டிய ஒரு நிலையையும் ஏற்படுத்தி உள்ளது''

# கத்தோலிக்க உண்மைகளுக்கான சங்கம்

''கத்தோலிக்க உண்மைகளுக்கான சங்கம்'' என்ற பெயரில் பொதுமக்களுக்கு கத்தோலிக்க விசுவாச உண்மைகளைத் தெளிவுபடுத்துவதற்காக இல. 20 ஞானார்த்த பிரதிபய மாவத்தை கொழும்பு 8 எனும் விலாசத்தில் ஒரு சங்கம் இயங்கத் தொடங்கியுள்ளது. கத்தோலிக்க போதனைகளை தெளிவுபடுத்த ஏற்படுத்தப்பட்ட மேற்படி சங்கமானது தனது மூன்றாவது துண்டுப் பிரசுரத்தை ''மரியாளை நாம் ஏன் மகிமைப்படுத்துகிறோம்'' என்ற தலைப்பில் வெளியிட்டு உள்ளது.

இரண்டாம் உலக மகா யுத்த வேளையில் கொழும்புப் பேராயர் J. M. மசோன் ஆண்டகை இலங்கைத்தீவு போரின் அபாயங்களில் காப்பாற்றப்படுமானால் ஒரு பேராலயத்தைக் கட்டுவதாக நேர்ந்து, இலங்கை நோக்கி வந்த யப்பானியப்படை புதுமையாகத் திசை திருப்பப்பட்டு, அழிவிலிருந்து காப்பாற்றப்பட்ட படியால் 1947 பெப்ரவரி 15 இல் இலங்கை ராக்கினி எமது நாட்டின் பாதுகாவலி எனப்பிரகடனம் செய்து 15.7.1950 இல் தேசிய பேராலயம் கட்ட அடிக்கல் இட்டார். 1947 பெப்ரவரி 6ம் திகதி இத்தேசிய பேராலயம் கருதினால் தோமஸ் கூறே அவர்களால் திருநிலைப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# புதுப்பொலிவோடு விவிலியத்தைத் தெரிந்துகொள்வோம்

அருள்திரு. R. H. சகாயநாயகம்

## எதற்காக விவிலிய வாரம்:

ஒவ்வொரு வருடமும் மார்கழி மாதம் முதல் வாரத்தை விவிலிய வாரமாகக் கொண்டாடி மகிழ்கின்றாள் திருச்சபைத் தாய். விவிலிய வாரத்தின் எல்லா நிகழ்வுகளுக்கும் மையமாக இருப்பது இறைவார்த்தை. எனவே விவிலிய வாரம் கிறிஸ்தவ வாழ்வில் இறைவார்த்தையின் தாக்கத்தை கனாகனத்தை ஆழமாகச் சிந்திக்கத் தூண்டுகிறது. குறிப்பாக 2000 மாம் யூபிலி ஆண்டையொட்டி இலங்கைக் கத்தோலிக்க ஆயர் மன்றம் வேண்டி நிற்பதும் திருச்சபையின் அடிப்படை அலகுகளான குடும்பங்கள் இறைவார்த்தை அடிப்படையில் சிறு குழுமங்களாக இணைந்து அன்பியல் வாழ்வு, பகிர்தல் வாழ்வு வாழ வேண்டுமென்பதே.

## விவிலியம் விளக்குவது என்ன?

புனிதர் ஜெரோம் என்ற வேத விற்பன்னர் கூறுகின்றார் 'வேதாகமத்தை அறியாதவன் கிறிஸ்துவை அறியாதவன்' என்று. வேதாகமத்தின் வழியாக இறைவனின் வெளிப்பாடுகளை, அவர் மனிதரோடு கொண்ட தொடர்பை உறவை, அவரின் தொடர் பராமரிப்பை நாம் காண்கின்றோம். கடவுளின் கருணையை நாம் உணர, அனுபவிக்க வேதாகமத்தை வாசிக்கவும், படிக்கவும், தியானிக்கவும் முன் வரவேண்டும்.

## இறைவார்த்தையின் சக்திதான் என்ன?

பவுல் அப்போஸ்தலர் எபிரேயருக்கு எழுதிய கடிதத்தில் 4 : 12) குறிப்பிடுகின்றார்.

''கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது. ஆற்றல் வாய்ந்தது இருபக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானது. ஆன்மாவையும் ஆவியையும் பிரிக்கும் அளவுக்குக் குத்தி ஊடுருவுகின்றது. எலும்பு மூட்டையும், மச்சையையும் அவ்வாறே ஊடுருவுகின்றது.''

இறைவாக்கினர் எசக்கியேல் கூறுகின்றார் இறை வார்த்தை தேனிலும் இனிமையானது என்று. இறைவாக்கினர் இசையாஸ் கூறுகின்றார்.

''மழையும் பனியும் வானத்தில் இருந்து இறங்கி வருகின்றன. அவை நிலத்தை நனைத்து முளை அரும்பி வளரச் செய்து விதைப்பவனுக்கு விதையும் உண்பவனுக்கு உணவையும் கொடுக்காமல் அங்கு திரும்பிச் செல்வதில்லை...'' இவ்வாறு தான் அறிவிக்கப்படும் இறைவார்த்தை பலனைத் தராது திரும்பாது.

## திருச்சபையில் புனிதர்கள் உருவாக உதவியது இறைவார்த்தை:

பாவியாய் வாழ்ந்த அகுஸ்தீன் இறைவார்த்தையின் தாக்கத்தால் புனித அகுஸ்தீனார் ஆனார்.

உலகியல் வாழ்வில் ஆர்வம் காட்டிய பிரான்சீஸ் சவேரியார் புனிதராக வரக் காரணமாய் இருந்தது இறைவார்த்தை தான்.

(தொடர்ச்சி 11 ஆம் பக்கம்)



## சிறப்புப் பண்புகள்:

பொது விவிலியத்தில் தெளிவுப் பொருள், எபிரேயச் சொல் முறையின் தமிழாக்கம், மரியாதைப் பன்மை, இருபாலாருக்கும் பொருந்தப் பேசுதல் போன்ற நான்கு பண்புகளை இவண் சிறப்பாகக் காணலாம்.

### 1. தெளிவுப் பொருள்:

தெளிவுப் பொருள் மொழி பெயர்ப்பு (DYNAMIC EQUIVALANCE) என்பது ஒரு கருத்துப் பகுதியில் உள்ள செய்தியை மற்றொரு மொழியின் மரபுக்கு ஏற்ப வழங்குவது. தெளிவுப் பொருள் மொழி பெயர்ப்பில் ஒரு மூலமொழிச் சொல்லின் முழுப் பொருளையும் வெளிக்கொணர பல சொற்கள் பயன்படுத்தப்படலாம். அது போல, மூல மொழியின் பல சொற்களுக்கு ஒரு சொல்லே பொருள் தரலாம். பொருள் தெளிவிற்காக சொல்லமைப்பு, மூல மொழியில் எப்படியிருந்தாலும் மொழிபெயர்ப்பில் தமிழ் மரபு முறைப்படியே அமையும்.

உ - ம்: லூக். 18:20 மூலமொழி – 'தந்தை தாயை மதி'
மொழி பெயர்ப்பு – 'தாய் தந்தையை மதி'

### 2. எபிரேயச் சொல் முறையில் தமிழாக்கம்:

ஒவ்வொரு மொழிக்கும் அதற்கே உரித்தான சொல் முறைகள் உண்டு. இவற்றைச் சொல்லுக்குச் சொல் மொழி பெயர்த்தால் பொருள் புரியாது. அவை சுட்டும் பொருளைத் தெளிவாய் புரிந்து கொண்டு பொருத்தமான சொற்களால் மொழி பெயர்க்க வேண்டும். பொது மொழி பெயர்ப்பிலும் எபிரேயச் சொல் முறைகளின் தெளிவுப் பொருளை வெளிக்கொணரும் இம் முயற்சிக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப் பட்டுள்ளது.

உ - ம்: முதலில் கத்தோலிக்க விவிலியம் (1970) ... பின் பொது விவிலியம்.

மத்தேயு 24:29 – ''வானத்தின் படைகள் அசைக்கப்படும்.''
– ''விண்வெளிக் கோள்கள் அதிரும்.''

லூக் 9:60 – ''இறந்தோர் தங்கள் இறந்தோரை அடக்கம் செய்து கொள்ளட்டும்''.
– ''இறந்தோரைப் பற்றிக் கவலை வேண்டாம். அவர்கள் அடக்கம் செய்யப்படுவார்கள்.''

லூக் 11:36 – ''உன்னிலுள்ள ஒளி இருளால் இருக்கின்றதா என்று பார்!''
– ''உங்களுக்கு ஒளிதர வேண்டியது இருளாய் இராதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்.''

லூக் 13:1 – ''பிலாத்து கலிலேயரின் இரத்தத்தை அவர்களுடைய பலியோடு கலந்தான் என்னும் செய்தியை அறிவித்தார்.''
– ''கலிலேயர் பலி செலுத்திக் கொண்டிருந்த போது பிலாத்து அவர்களைக் கொன்றான் என்னும் செய்தியை அறிவித்தனர்.''

யோவான் 11:25 – ''இவ்வுலகில் தன் உயிரை வெறுப்பவன்...''
– ''இவ்வுலகில் தம் வாழ்வை ஒரு பொருட்டாகக் கருதாதோர்...''

### 3. மரியாதைப் பன்மை:

மரியாதைப் பன்மை தமிழ்ப் பண்பாட்டுக்கு உரிய சிறப்புப் பண்புகளில் ஒன்றாகும். என்றாலும் நடைமுறையில் 'ர்' விகுதி அதிகமாகப் பயன்படுத்தப் படுவதில்லை. பொதுவாக தமிழ்ச்சமுதாயத்தில் பணம், படிப்பு, பதவி, செல்வாக்கு ஆகியவற்றின் அடிப்படையில்தான் மனிதர்கள் மதிக்கப் படுகிறார்கள். இவற்றைக் கொண்டுள்ளோர்க்கு மரியாதைப் பன்மை பயன் படுத்தப் படுகின்றது. இவை இல்லாதோருக்கும், பெண்களுக்கும் ஒருமையே பயன் படுத்தப் படுகின்றது. ஆனால் மேற் சொல்லப் பட்ட தகுதிகளின் அடிப்படையில் மரியாதை அளிப்பது முறையல்ல, இதற்கு மாறாக பணம், படிப்பு, பதவி, செல்வாக்கு, உடல் நலம், ஆண்மை அடிப்படையில் மதிப்பளித்து, மனிதரிடையே வேறுபாடு காட்டும் வழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

இந்த அடிப்படையில் பொது விவிலியத்தின் பெண்களுக்கு 'ர்' விகுதி பயன் படுத்தப் படுகின்றது. உ – ம்: மத். 1 : 22 ''இதோ கன்னி கருவுற்று ஒரு மகனைப் பெற்றெடுத்தார்.'' ஆண்களைப் பொறுத்தவரையில் பொதுவாக எல்லோருக்கும் மரியாதைப் பன்மை மறுக்கப் படுகிறது. உ – ம்: மத். 2 : 3 ''ஏரோது அரசன் கலங்கினான்.'' தந்தை மகன் உறவு, சகோதர உறவு, நெருங்கிய நட்புறவு, குரு - சீடர் உறவு போன்றவை வெளிப்படும் நேரங்களிலும் உ – ம்: லூக். 3 : 22 ''என் அன்பார்ந்த மகன் நீயே...'' ஒருமையே பயன்படுத்தப்படுகிறது.

(தொடர்ச்சி 11 ஆம் பக்கம்)

# யாழ்ப்பாணத்தில் பாலன் பிறப்பாரா?

திராட்சையூர் றஜன்

கிறிஸ்து பிறப்பு விழாவானது உலகெங்கணும் மிக ஆடம்பரமான முறையில், பாரிய முன் ஆயத்தங்களுடன் எதிர் கொள்ளப்படுகின்றவிழாவாகும். ஆனால் இவ் விழாவிற்குரிய அர்த்தம் கொடுக்கப்பட்டு கொண்டாடப்படுகின்றதா என்றால் கேள்விக் குறியே. இவ்வாறான ஆடம்பரங்களோடு பாலன் பிறக்க, யாழ்ப்பாணத்தில்......

காணாமல் போனோர் பட்டியல் அதிகரித்தது. உண்ணாவிரதங்களும் ஊர்வலங்களும் சூடுபிடித்து, பலவித உரிமை, உடமை இழப்புக்களால் மக்கள் எதிரிகளாக்கப்பட்டு, உறவுகள் பிரிக்கப்பட்டு, குடும்பங்கள் சின்னாபின்னமாக்கப்பட்டு போர் அனர்த்தங்களினால் பெற்றோரை,சகோதரங்களை, பிள்ளைகளை இழந்து வாழ்க்கையே சுமையாக வாழ்வதற்கு வழி தெரியாமல்; மரணங்கள் உறுதிப்படுத்தப்படாமல், மரணித்தவர்கள் இன்றும் வாழ்கின்றார்கள் என்று எதிர் பார்த்து காத்துக் கொண்டிருக்கும் விழிகளில்; கிடைத்த சொற்ப சுதந்திரத்திற்கும் முள்ளுக் கம்பி சுற்றப்பட்ட நிலையில், ஏன் வாழ்கிறோம் என்று தெரியாது வாழ்க்கைச் சதுரங்கத்தை நகர்த்திக்கொண்டிருக்கும் எம் மக்கள் மத்தியில் ''எம்மிடையே பாலன் பிறப்பாரா? விடுதலைச் செய்தியைத் தருவாரா?'' என்ற வினா எழுவது சகஜம், மனித இயல்பும் கூட,

இன்று உரிமைகள் பறிக்கப்பட்டு, உடமைகள் அபகரிக்கப்பட்டு பாரவோன் மன்னனால் யூதமக்கள் அடிமைகளாக்கப்பட்டு, கொடுமைப்படுத்தப்பட்டார்கள். அவர்களும் ஒரு முழு மனித விடுதலையை எதிர் பார்த்துக் காத்திருந்தார்கள். மெசியாவின் பிறப்பு தாங்கள் எதிர்பார்த்த முழு மனித விடுதலையை தருமென்று நம்பினார்கள். ஆனால் மெசியாவின் பிறப்பு, மிகவும் தாழ்த்தப்பட்ட இடையர் குல மக்களுக்கு முதல் விடுதலைச் செய்தியை அறிவித்தது. மெசியாவின் உலக வருகை அவர்கள் எதிர்பார்த்திராத ஒரு விடுதலைச் செய்தியைக் கொடுத்தது.

எனவே உரிமைகள் பறிக்கப்பட்டு, இழப்புக்களால் வாடிப்போய், ஓடி, ஓடி களைத்துப் போய் இருக்கும் எமக்கும் ஒரு விடுதலைச் செய்தியை, மீட்புச் செய்தியைத் தருவதற்காக பாலன் நிச்சயமாக யாழ்ப்பாணத்தில் பிறப்பார். அவரது செய்தி நாம் எதிர் பார்க்காத முறையில் அமைந்திருக்கும். எனவே அந்தச் செய்தி, அன்று இடையர்களைப் போன்று இன்று எமக்கும் எட்ட யேசு பாலனுடன் ஒ சபத்தில் ஒன்றிப்போம்.


## நற்செய்திப் பணி செய்ய நல்லதொரு சந்தர்ப்பம்

திருத்தந்தை 2 ஆம் அருள் சின்னப்பர் அறிவித்துள்ள ''EVANGELIZATION'' 2000 குறிக்கோளுடன் நற்செய்தித் தூதுரைக்க விரும்புவோருக்கு இது ஒரு வழி.

★ இறைவாக்குத் தாகத்தோடு விவிலிய நூல் வாங்க வசதியற்று இருப்பவர்களுக்கு திருநூல் வாங்க உதவுவது.

★ முழு விவிலியம் ரூபா 300 திய ஏற்பாடு ரூபா 90.

★ உங்கள் பெயரால் நீங்கள் விரும்பியதை நாங்கள் அவர்களுக்கு அனுப்பிவைப்போம். அதற்கு உதவியாக நீங்கள் பணம் அனுப்பவேண்டிய வங்கிக் கணக்கு 28283 வர்த்தக வங்கி.

★ நீங்கள் கேட்டால் அவர்களின் முகவரியையும் தருவோம்.

★ இந்த நற்செய்திப் பணியை ஒரு நேர்ச்சையாகவும் செய்யலாம்.

★ நீங்கள் உதவியவர்கள் விவிலிய நூலை நல்ல முறையில் பயன்படுத்துகிறார்களா என்று கவனிப்பதும் உங்கள் கடமைதான்.

★ உதவுவோரின் பெயர்கள் பாதுகாவலனில் வெளியிடவுள்ளோம்.

நீங்கள் பணம் அனுப்ப தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

BIBLE BANK
மறைக்கல்வி நிலையம்,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

## வாசகர் கருத்து...

( 3ஆம் பக்கத் தொடர்ச்சி )

தங்கள் காவலன் பத்திரிகையும் எமக்குக் கிடைப்பதில்லை. இடைக்கிடை சுவாமிக்கு வரும்போது பார்ப்பேன். கவர்ச்சியும் கலந்து காணப்பட்டாலும் எமது கத்தோலிக்கவார (மாத) இதழின் நோக்கமே திருமறைச் செய்திகளையும் திருநூல் படிப்பினைகளையும் வாசகர்களுக்கு வழங்க முன்வருதல்; குறிப்பாக ஏ.எல். மாணவர்களுக்கு பயன்படுத்தக்கூடிய விதத்தில் '' அருள்வாக்கு அறிவோம்'' பகுதியைத் தொடர்ந்தால் என்ன? வாசகர் வட்டத்தைப் பெருக்குவதோடு, பாடசாலைகளில் கற்கமுடியாத நிலையில் உள்ள மாணவர்க்கும் காவலன் வழியாகவென்றாலும் கற்கலாமே? எத்தனையோ செலவுகள் மத்தியிலும் இதனையும் ஒரு கட்டாய, அதேவேளை, பயனுள்ள செயலாக எண்ணி ஒரு பக்கத்தை மேலதிகமாக, இணைத்து வெளியிட்டால்...? காலாகாலத்துக்கும் பயன்படக் கூடியவிதத்தில் சேகரித்தும் வைக்கலாமே? (முன்பு ஈழநாதத்தில் வெளியான மாணவர் பக்கம் இன்றும் பலரால் சேகரித்து 'பைன்ட்' பண்ணப்பட்டு படித்துப் பயன்பெறுவதை நாம் காண்கின்றோம்) காவலன் கசக்கிஎறிகின்ற பத்திரிகையாக இராது கையடக்கமாகப் பேணப்படுகின்ற பத்திரிகையாகவும் மாறும்; இது உங்கள் சிந்தனைக்கு:

நிலைமை ஓரளவென்றாலும் சீரானால், காவலன் பத்திரிகையை நான் எடுத்து விநியோகம் செய்யலாம். தற்போதைக்கு மாதிரிக்காக 10 காவலன் பத்திரிகைகளை முடியுமானால் எனக்கு அனுப்பி வைக்கவும். வருட சந்தா எவ்வளவு என்றும் குறிப்பிடவும்.

நலத்துடன், செபத்துடன்
நாதர்.

## புதுப்பொலிவோடு...

### எதற்காக விவிலிய......

( 10ஆம் பக்கத் தோடர்ச்சி )

### இறைவார்த்தையில் வாழ்வின் நெறியை அமைத்த மகாத்மா:

இந்திய தேசப்பிதா காந்தி வேதாகமத்தை வாசித்தார். சிறப்பாக மலைப்பொழிவைப் படித்தார், தியானம் செய்தார். இதன் காரணமாக நல்ல சிந்தனையும், சமுதாய விழிப்புணர்வும், மனித நேயமும் அவர் வாழ்வில் மலர்ந்ததை நாம் காண்கின்றோம்.

### இறைவார்த்தை அன்றும் இன்றும்:

அன்று மோயீசனின் வழியாகப் பேசிய கடவுள்- இன்றும் தமது வார்த்தை வழியாக நம்மோடு பேசுகின்றார், வாழ்வில் வரும் வேதனைகள், சோதனைகள், துன்பங்கள், தனிமை, விரக்தி இவைகள் மத்தியில் வாழும் எமக்கு அருமருந்தாக, ஆலோசகராக வார்த்தை வழி நம்மைத் தரிசித்து நம்மோடு பேசி, நம்மோடு தங்கி இருக்கின்றார்.

காலத்தின் குறிகள் ஊடாக நம்மோடு பேசும் கடவுளைச் சந்திக்க, பேச, மனம் மாற, அவரில் தங்கி இருக்க இறைவார்த்தையை விருப்போடு நாடுவோம்.

குறிப்பாக விவிலிய வாரத்தில் ஆண்டவரின் வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பணிசெய்ய முன்வருவோம். வீட்டுக்கொரு விவிலியம் நாளுக்கொரு அத்தியாயம் என்ற வகையில் குடும்பமாக இறைவார்த்தையைக் கேட்கவும், தியானிக்கவும் முயலுவோமாக.

## மரியாதைப் பன்மை... (10ஆம் பக்கத் தொடர்ச்சி)

### 4. இருபாலாருக்கும் பொருந்தப் பேசுதல்:

விவிலியத்தின் பிறப்பிடமாகிய யூத சமுதாயம், ஏனைய பழங்காலச் சமுதாயங்களைப் போல ஓர் ஆண் ஆதிக்கச் சமுதாயமாக இருந்தது. பலவேளைகளில் இருபாலாருக்கும் என்று கூறப்பட்டவைகள், ஆண் ஆதிக்கத் தன்மையின் தாக்கத்தால் ஆண் மேல் ஏற்றிக் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு கூறப்பட்டவைகள் பொது மொழி பெயர்ப்பில் இருபாலருக்கும் பொருந்தும் முறையில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

உ – ம்: மத். 5;23 – "நீ காணிக்கை செலுத்த வரும்போது உன் சகோதரனுக்கு உன் மீது மனத்தாங்கல் இருப்பதாக அங்கே நினைவுற்றால்...
– '' நீங்கள் உங்கள் சகோதர சகோதரிகளுக்கு உங்கள் மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டென அங்கே நினைவுற்றால்...

இன்னும் பொது விவிலியத்தை இலகுவாக விளங்கிக் கொள்வதற்கு அதன் ஒரு சில பகுதிகளையும் நோக்குவோம்.
முதல் கத்தோலிக்க விவிலியம் — பின் பொது விவிலியம் (1970)

தொடக்க நூல் 3;15 – '' உனக்கும் பெண்ணிற்கும், உன் வித்துக்கும், அவள் வித்திற்கும் இடையே பகையை உண்டாக்குவோம். அவள் உன் தலையை நசுக்குவாள். நீயோ அதன் குதிக்காலைத் தீண்ட முயல்வாய் ''.
– '' உனக்கும் பெண்ணிற்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்குமிடையே பகையை உண்டாக்குவோம். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும், நீ அதன் குதிக்காலைக் காயப்படுத்துவாய்,''

முதலில் தரப்பட்டுள்ள பகுதி, கி. மு. 3 ஆம் நூற்றாண்டில் ('செப்துவாஜிந்த்') எபதின்மர் மொழிபெயர்ப்பு, எபிரேய மொழியில் இருந்து கிரேக்க மொழிக்கு மொழி பெயர்க்கப்பட்டபோது, கிரேக்க மொழியின் செல்வாக்கின் காரணமாக, இவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டு விட்டது.

இரண்டாவது பகுதி மூலமொழியாகிய எபிரேயத்திலிருந்து நேரடியாகத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதினால், சிறப்பாக நம் தமிழில் விளங்கக்கூடியதாக அமைந்துள்ளது.

எரே. 20;6 – '' ஆண்டவரே நீர் என்னை மயக்கி விட்டீர், நானும் மயங்கிப் போனேன் நீர் என்னைவிட வல்லமையுடையவர் என்மேல் வெற்றி கொண்டுவிட்டீர்.''
– '' ஆண்டவரே நீர் என்னை ஏமாற்றி விட்டீர்; நானும் ஏமாந்து போனேன். நீர் என்னைவிட வல்லமையுடையவா, என்மேல் வெற்றி கொண்டுவிட்டீர்.''

இறைவாக்கினர் எரேமியாவை இறைவன் அவர் தம் பணிக்கு அழைத்தபோது, '' எனக்குப் பேசத் தெரியாதே, சிறுபிள்ளைதானே '' என்று தனக்கிட்ட பொறுப்பைத் தட்டிக் கழிக்க அவர் முற்பட்டபோது '' உன்னைப் பெரியவற்றிற்கு அதிகாரியாக்குவேன்'' என்று கூறியே இறைவன் எரேமியாவை இறைவாக்குப் பணிக்கு அழைத்தார். இருந்தும் இறைவாக்கினர் தன்னுடைய பணியில் பல தோல்விகளையே சந்திக்க முடிந்தது. இதனால் எரேமியாஸ் ஆண்டவரைப் பார்த்துக் கூறிய வார்த்தைகள் இரண்டாவது பகுதியில் மிகவும் தெளிவாக விளங்கக்கூடியதாய் உள்ளது.

லூக். 22;19 – ''இது உங்களுக்காக அளிக்கப்படும் என் உடல். இதை என் நினைவாகச் செய்யுங்கள்'' என்றார்.
– ''இது உங்களுக்காகக் கொடுக்கப்படும் என் உடல், இதை என் நினைவாக இவ்வாறு செய்யுங்கள்.''

கல்வாரிப் பலி அன்று நடந்து முடிந்துவிட்டதொன்று அன்று. அது தொடர்ந்து நடைபெறவேண்டியதொன்று. அது திருப்பலி வழியாகத் தொடரப்படுகின்றது. எனவே பலி நிறைவேற்றும் முறையையும் இயேசுவே செய்து காட்டுகின்றார். ''இவ்வாறு செய்யுங்கள் '' என்று, எனவே பின்னைய பகுதி பொருள் தெளிவுள்ளதாக அமைந்திருப்பதை நாம் காண்கின்றோம்.

லூக். 21;19 – '' நிலைத்து நின்றால் உங்கள் ஆன்மாக்களை மீட்டுக்கொள்வீர்கள்''.
'' நீங்கள் மன உறுதியோடிருந்து உங்கள் வாழ்வைக் காத்துக்கொள்ளுங்கள்.''

எமக்கு இறைவனால் அருளப்பட்ட வாழ்வு என்னும் கொடை மிகவும் முக்கியமானதாகும். இவ் வாழ்வில் ஒரு மாற்றம் ஏற்படுமேயொழிய, மரணத்தின் மூலம் அது அழிக்கப்பட முடியாதது. எனவே எமக்கு இறைவனால் தரப்பட்ட வாழ்வைக் கண்ணும் கருத்துமாய் இருந்து காப்பதற்கு எமக்கு மனவுறுதி அவசியம் என்பது இரண்டாவது பகுதியில் மிகவும் தெளிவாக இருப்பதைக் காணலாம். எனவே, எப்போது கிறிஸ்துவில் மனவுறுதியுடன் இருக்க வேண்டும் என்பது இங்கே சிறப்பாகக் காட்டப்படுகின்றது.

யோவான் 11;25 – ''உயிர்ப்பும் உயிரும் நானே''
– ''உயிர்த்தெழச் செய்பவனும், வாழ்வு தருபவனும் நானே''.

இயேசுவே இறைமகனாகிய மெசியா என நீங்கள் நம்புவதற்காகவும், நம்பி அவர் பெயரால் வாழ்வு பெறுவதற்காகவுமே இந்நூலில் உள்ளவைகள் எழுதப் பெற்றுள்ளன என நற்செய்தி யோவானின் ஆசிரியர் தன் நூலை முடிக்கிறார். இயேசுவே நமது வாழ்வு என்பதை இரண்டாவது பகுதி தெளிவாக்குகின்றதல்லவா ?

எனவே எளிய, இனிய தமிழில் யாரும் எளிதில் படித்து விளங்கக் கூடிய வகையில் கத்தோலிக்கரும், கத்தோலிக்கரல்லாத கிறிஸ்தவ சபையினரும் ஒன்றிணைந்து மேற்கொண்ட பொதுவிவிலிய மொழிபெயர்ப்பு முயற்சி பூர்த்தியாகி, நமது மறை மாவட்டத்திலும் அதை இலகுவாகப் பெறக்கூடிய வகையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. ஆகையினால், விவிலியத்தை வாங்குவோம்.

வீட்டுக்கொரு விவிலியம் நாளுக்கொரு
அத்தியாயம் நாமெல்லாம் படித்து
இறைவார்த்தையில் எம் வாழ்வை
ஊட்டம் பெறச் செய்வோம்...'

மறை ஆசிரியர்
S. அந்தோனிப்பிள்ளை

## பொன்விழாக் காணும் அருட்சகோதரி



அருட்சகோதரி
மேரி பற்றிமா

பிறந்த ஆண்டு: 1926
பிறப்பிடம்: நாரந்தனை.
ஆரம்பக்கல்வி: தி.கு.க. மடம் நாரந்தனை
துறவறப் பிரவேசம்:02.01.1946
துறவற அர்ப்பணம்:18.12.1947
உயர்கல்வி: கொழும்புத்துறை புனித வளனார் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை.
ஆசிரிய பணியாற்றிய இடங்கள் முல்லைத்தீவு, மானிப்பாய், பாஷையூர், பேசாலை, நானாட்டான், மன்னார், இளவாலை, மாதகல்.
சமூகப்பணி: பண்டிவிரிச்சான், மடுப்பதி.
தற்போது: மிருசுவில்.

பொன் யூபிலி விழா
(18.12.1947 - 18.12.1997)

குடும்ப அங்கத்தினர்-
திரு. திருமதி. மாகிறேட் அலோசியஸ்
திருவாளர். D. A. M. குணசிங்கம்
திரு. திருமதி. சறோ, தங்கராசா.
புதல்வி. நிஷாந்தி

## மீண்டும் மாணவர் விடுதி

இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரியில் மீண்டும் புனித வளனார் மாணவர் விடுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது 30 மாணவர்கள் இங்கு தங்கி கல்வி கற்கின்றனர்.

அடுத்த ஆண்டுக்கு குடா நாட்டின் தூர இடங்களில் இருந்து இவ்விடுதியில் சேர பலர் அனுமதி கோரியுள்ளனர்.

## கிறிஸ்மஸ் தாத்தா ...

( 12ஆம் பக்கத் தொடர்ச்சி )

படைக்கின்றார். பப்பாவின் சிறப்பையும், அதன் அற்புதமான, ஆழமான வர்ணிப்பையும் இந்த கவிதையில் கண்ட பேராசிரியரின் நண்பர் ஒருவர் இதை ஒரு பத்திரிகைக்கு வழங்க அது அனைவராலும் பாராட்டப்பட்டு பேராசிரியர் சிந்தையில் உதித்த பப்பா காலப்போக்கில் தோற்றம் பெற்று மக்களால் போற்றப் படுகின்றார்.

## கிறிஸ்மஸ் பாடல்

( 12ஆம் பக்கத் தொடர்ச்சி )

தனது 3 மைல் நடைபயணத்தின்போது அந்த இரவின் தனிமையை பொருட்படுத்தாது இதயத்தில் கிறிஸ்துவின் சமாதானத்துடன் தாம் கண்ட பெத்தலேகேம் அனுபவத்தால் ஊந்தப்பட்டு ஒரு புதிய சிந்தனையுடன் சென்ற அவர் மனதில '' அமைதி இரா - தூய இரா '' என்னும் கிறிஸ்மஸ்நயம்படக் கூறி தனது பாடல் உருவாகுகின்றது.

மறுநாட் காலை அருட்தந்தை தனது நெருங்கிய நண்பன் புனித நிக்கிலஸ் தேவாலயத்தில் கிட்டார் வாசிப்பவருமான திரு. பிரான்சிஸ் குறூபரைச் சந்தித்து தனது முதல்நாள் மாலை அனுபவத்தை மிகவும் லையும் கூறினார். திரு. குறூபா தந்தையின் சிந்தனைக் கேற்பவும், அந்தப் பாடலுக்கு ஏற்பவுமாக மிக மிக அற்புதமாக தெய்வீக இசையை அந்தப் பாடலுக்கு அமைத்துக் கொடுத்தார். இதுவே காலப் போக்கில் சிறப்புப் பெற்ற கிறிஸ்மஸ் பாடலாக அமைந்தது.

# கிறிஸ்மஸ் விழா

" கிறிஸ்மஸ் " என்னும் சொல்லானது 'கிறிஸ்துவின் பலி' என்னும் கருத்தைத் தரும் ஆங்கில சொல்லில் இருந்து பெறப்பட்டது. இச் சொல் முதன் முதலாக 11 ஆம் நூற்றாண்டிலேயே வழக்கிற்கு வந்தது.

கிறிஸ்மஸ் விழாவிற்கு சரியான வரலாறு இல்லை எனினும் ஆரம்ப கிரேக்கர்கள் சூரியனுக்கு நன்றி செலுத்தும் சூரிய விழாவாக கொண்டாடப்பட்ட டிசெம்பர் 25ஆம் திகதியை பிற்பட்ட கால கிறீஸ்தவ மத எழுச்சியில் கிறீஸ்தவமத ஸ்தாபகர் யேசுக் கிறீஸ்துவின் பிறப்பு விழாவாக நினைவு கூர்ந்தனர். கிறீஸ்தவத்தின் ஆரம்ப நாட்களில் பல பேதங்கள் எழுந்து கிறீஸ்தவக் கருத்துக்களை சிதைக்க முற்பட்டது. அதில் ஒன்றாகவே யேசுவின் மனிதத்தன்மையை மறுக்கும் கொள்கை காணப்படுகின்றது. எனவே இப் பேதகத்திற்கு முகம் கொடுக்கும் விதமாக கிறீஸ்துவின் மனிதத்துவத்தினை உறுதிப்படுத்தும் நிகழ்வாக கிறீஸ்துவின் பிறப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து கொண்டாடப்பட்டுவந்தது.

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

# கிறிஸ்மஸ் தாத்தா



இற்றைக்கு 175 ஆண்டின் முன்னேயே தற்போதைய குறும்புக்கார கிறிஸ்மஸ் தாத்தா தோன்றினார். இவர் அமெரிக்கப் பேராசிரியர் க்ளெமெண்ட்ஸிமூர் என்பவரின் கற்பனையில் உதயமானவர்.

16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புனித நிக்கிலஸ் "மிரா" என்னும் ஊருக்கு ஆயராக இருந்தார். இவர் இயல்பாகவே ஏழைகள் மட்டிலும், துன்புறுவோர் மட்டிலும், மிகவும் இரக்கமாய் இருப்பதுடன் அவர்களுக்குத் தன்னை யார் என்று தெரியப்படுத்தாமல் தன்னால் இயன்ற உதவிகளை அவர்கள் கேட்காமலேயே செய்வார். சிறுவர்கள் மட்டிலும் மிகுந்த அன்புடைய ஆயர். அவர்களுக்கு விதம்விதமான பரிசுப் பொருட்களை வழங்கி அவர்களை குதூகலிக்கப்பண்ணுவார்.

இவரது நினைவாக பிற்பட்ட காலங்களில் பண்டிகைக் காலங்களில் குறிப்பாக கிறிஸ்மஸ் காலங்களில் பரிசுப் பொருட்கள் பரிமாறும் நிகழ்வு மக்கள் மத்தியில் இருந்தது.

பேராசிரியர் கிளமெண்ட்ஸி 1822இல் கிறிஸ்மஸ் பண்டிகை நாட்களில் தனது நண்பர்களுக்கு பரிசுப் பொருட்கள் கொடுக்க, தனது குதிரை வண்டியில் சின்ன மகளுடன் பரிசுப் பொருட்கள் கொண்டு செல்கின்றார். பனி படர்ந்த வீதியினூடே செல்லும்போது புனித நிக்கலஸ் ஆயர் பற்றி சொல்லும்படி தந்தையை மகள் கேட்க கவிதை படைக்கும் ஆற்றலுடைய பேராசிரியர் தனது சின்ன மகளுக்கு "புனித நிக்கலஸின் விஜயம்" என்னும் கவிதையூடு தற்போதைய கிறிஸ்மஸ் தாத்தாவைப்

(தொடர்ச்சி 11 ஆம் பக்கம்)

தொகுப்பு:
பி. றெஜிஸ் நியூட்டன்

# கிறிஸ்மஸ் மரம்





ஜெர்மனியர்களது தெய்வமாகிய ஒடின் (Odin) ஒரு மரத்தில் ஒன்பது நாட்கள் தூங்கிய பின்பு இறந்து போனதாம். இதனால் அந்த மரத்தைப் புனிதமானதாகக் கருதினர். இதுவே காலப் போக்கில் கிறிஸ்மஸ் மரமாக வந்தது என்பது சிலரது கருத்து.

வேறு சிலரது கருத்துப்படி புனித பொனிபஸ் என்பவரால் கி.பி. 680 - 755களில் அவர் ஜெர்மனியில் மறைபரப்பாளராய் இருந்த போது இப்பழக்கம் ஆரம்பிக்கப்பட்டது. அதாவது ஒரு கிறிஸ்மஸ் மாலையில் அவர் புதிதாக மனந்திரும்பியவர்களிடம் ஊசியிலை மரத்தைக்காட்டி இது மேல் நோக்கி வளர்ந்து குழந்தை யேசுவைச் சுட்டி நிற்கின்றது என்று கூறினார். இதனைக் கேட்ட மனம் மாறிய மக்கள் தமது மனமாற்றத்தின் அடையாளமாக கிறிஸ்மஸ் காலங்களில் அம்மரங்களைத் தம் வீடுகளில் வைத்து அலங்கரித்தனர் என்றும் கூறுவர்.

18 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்திற்கும் 19ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவிற்கும் இக் கிறிஸ்மஸ் மரம் பரவியது.

இவ்விதம் நாம் பல வர்ண சோடனைகளாலும் பலூன்களின் குமிழ்களாலும் கிறிஸ்மஸ் மரத்தை அழகுபடுத்துகின்றோம் அல்லவா? ஆனால் உக்கிறேன் நாட்டில் கிறிஸ்மஸ் மரத்தை எதனால் அலங்கரிக்கின்றார்கள் தெரியுமா? பல வர்ணத் துணிகளால் ஆன சிலந்திகளால் அலங்கரிக்கின்றார்கள். இதற்கு அவர்களிடம் மரபு ரீதியான கதை ஒன்று உண்டு.

ஏரோது அரசன் குழந்தை யேசுவைக் கொல்ல வீரர்களை அனுப்பியபோது திருக்குடும்பம் எகிப்துக்குத் தப்பி ஓடுகின்றது. அப்பொழுது வழியில் ஒரு குகையில் தங்குகின்றனர். அவ் வழியால் வந்த போர் வீரர் குகைக்குள் நுழைகையில் குகை வாயிலை சிலந்தி வலை மூடி இருந்தது. எனவே உள்ளே ஒருவரும் இருக்கமாட்டார்கள் என எண்ணி அவ்விடத்தை விட்டு வீரர்கள் சென்றனர். எனவே அந்நிலையில் உள்ளே இருந்த திருக்குடும்பத்தை காப்பாற்றியது சிலந்தியே என்று அவர்கள் அதனை நினைவு கூரவே கிறிஸ்மஸ் மரத்தில் சிலந்தி உருவத்தை தொங்கவிட்டு அழகுபடுத்துகின்றனர்.

# கிறிஸ்மஸ் பாடல்



Silent Night
Holy Night



இற்றைக்கு சுமார் 179 ஆண்டுகளின் முன் இக்கிறிஸ்மஸ் பாடல் தோன்றியது என்று கூறப்படுகின்றது.

அக்கால வழக்குப்படி குருவானவர் வீடுகளுக்கு சென்றே திருமுழுக்கு கொடுப்பது வழக்கம். எனவே 1818ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் விழாவுக்கு மூன்று கிழமைகளின் முன் இனிமையான அமைதி பொங்கும். மாலை நேரம் ஆஸ்திரியாவில் உள்ள ஒபெரிண்டோவ் கிராமத்தின் பங்குத்தந்தையாகிய அருட்திரு யோசேவ் மோர் அவர்கள் தனது பங்கைச் சேர்ந்த ஒருவரின் ஆண் குழந்தைக்கு திருமுழுக்கு கொடுக்க சென்று கொண்டிருக்கின்றார். அந்தஅமைதி நிகழ்வுகள் நிழலாட குறிப்பிட்ட வீட்டிற்கு சென்றார்.

(தொடர்ச்சி 11 ஆம் பக்கம்)

# கிறிஸ்மஸ் குடில்




எகிப்தில் இருந்து பலஸ்தீனாவுக்குச் செல்லும் வழியில் ஜெருசலேமிற்குத் தெற்கே 6 மைல் தொலைவில் மலைகளால் சூழப்பட்ட இயற்கை வளம் நிறைந்த ஒரு சிற்றூரே பெத்தலேகேம். இங்கு ஒரு குகையிலே யேசு பிறந்தார்.

உரோமைப் பேரரசன் கொன்ஸ்ரன்ரையினும், அவனுடைய தாயாரான எலேனம்மாள் என்பவளும் 4ஆம் நூற்றாண்டுகளில் யேசு பிறந்ததாகக் கருதப்பட்ட அந்தப் பெத்தலேகேம் தொழுவத்தை ஆலயமாக மாற்றி அமைத்தனர் எனக் கூறப்படுகிறது.

4ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புனித ஏரோனிமூஸ் பெத்தலகேமுக்கு திருயாத்திரை செய்தபோது அக்குகையில் இருந்த புனிதப் பொருட்களை உரோமைக்கு எடுத்து வந்தார். 5ஆம் நூற்றாண்டில் பரிசுத்த தந்தை 3 ஆம் செக்துஸ் உரோமையிலே உள்ள புனித மேரி மேஜர் தேவாலயத்தைப் புதுப்பித்த

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

# மாதவம் செய்ததோ மாடடைக் குடில்



விண்ணவன் மைந்தன் பிறக்க
வீடுகள் திறக்க வில்லை.
மண்ணவர் மனங்கள் எல்லாம்
மமதையால் மகுடமிட்டார்.
கண்ணிய மாகவே அங்கு
கடவுள் மகன் உதிப்பதற்கு
மாதவம் செய்ததோ அந்த
மாடடை குடிலும் பாரில்!

சாதக மாகவே தனது
சரித்திரம் படைக்கத் துடிக்கும்
பாதக மனிதர் வாழும்
பாரினிலே இன்று
வேதனை நிலையை நீக்கி
விரக்தியின் இருளைப் போக்க
ஆதவன் போல உதித்து
அருள்தர வாராய் அமலா!

— அபிர்ராஜன் —
யாழ். மறைக்கல்விநிலையம்

இப்பத்திரிகை புனிதவளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதான வீதி 360 இலக்கத்திலுள்ள அச்சகத்தில்1997 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது இல P 193